# கெனமன் கும்பலின் மரண ஓப்பாரி


# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 | இதழ் 42 | ஜூன் 27, 1964 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


## தொழிலாளர் துரோகிகளின் பதவிமோகப் பிதற்றல்

**இடதுசாரி ஐக்கிய முன்னணி தகர்ந்து விட்டது. ஒரு கோஷ்டி அடங்கிவிட்டது. மற்றைய இரண்டு கோஷ்டிகளும் அண்மையில் அறிக்கைகள் வெளியிட்டுள்ளன.**

இடதுசாரி முன்னணி சீர்குலைந்ததினால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் நிலைகுலைந்து, மௌனமுற்றிருந்த திரிபுவாதக் கும்பல், அடிபெயர்ந்து விழுந்த நிலையிலிருந்து மீண்டும் மூச்சுவிட வெகுநாட்கள் சென்றன.

மிகக் கஷ்டத்திற் கிடையே இத் திரிபுவாதக் கும்பல், வெளியிட்டுள்ள இவ்வறிக்கைகளில் அடங்கியுள்ள முக்கிய செய்தி என்னவெனில், எங்களையும் ஆட்சியில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கெஞ்சும் பாவனையேயாகும்.

உண்மையான மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகளினால் விரட்டி ஓட்டப்பட்டபின், திரிபுவாத பீட்டர் கும்பலால், சுயேட்சையாக எழுந்து போராட எத்தகைய சக்தியும் இல்லாதிருந்ததுடன், அவர்கள் பெலவீனமுற்றிருந்தனர். இந்த வேளையில், உயிர் போகும் நிலையில் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்தவனுக்கு, சிறு மரக்கட்டை கிடைத்தது போன்று, செத்துக்கொண்டிருந்த இத் திரிபுவாதிகளுக்கு ஓரளவு மூச்சுவிட இடதுசாரி முன்னணியின் தோற்றம் வாய்ப்பளித்தது. ஆனால் கிடைத்த மரக்கட்டை கை தவறிய நிலையில் நீரில் தத்தளிக்கும் மனிதனைப் போன்று முன்னணியிலிருந்து மற்றைய இரண்டு கட்சிகளும் விலகிச் சென்ற காரணத்தால், பூரண ஏமாற்ற மடைந்து மீண்டும் திரிபுவாதிகள் சவக்கோலம் பூண்டுள்ளனர்.

சாகப் போகிறவனின் கடைசி முயற்சியையொத்த நிலையில், அரசாங்கத்துடன் ஒட்டி நின்றால்தான் தமக்கு வாழ்வுண்டு என்ற எண்ணத்தில் திரிபுவாதிகள் கூட்டம் இன்று சரணாகதிப் பாட்டுப் பாட ஆரம்பித்துள்ளது.

முழு இடதுசாரி ஐக்கிய முன்னணியையும் அரசாங்கத்தில் எடுக்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை வைப்பது போலி விளையாட்டாகும். தமது ஒரே கதி மோட்சமான ஐக்கிய முன்னணி மாய்ந்து மறைந்ததன்பின் கூட அதனை ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு விருப்பமில்லை.

இது இப்படியிருந்த பொழுதும், இடதுசாரி ஐக்கிய முன்னணி உடைந்தது சம்பந்தமாக அவர்கள் சமசமாஜக் கட்சிமீது தமது அறிக்கையில் வேறோர் இடத்தில் குற்றஞ் சுமத்தியுள்ளனர் எனத் தெரிகின்றது. ஒரு பக்கத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணி உடைந்து விட்டது என்பதை ஏற்றுக்கொள்ள விருப்பமின்மை, மறுபக்கத்தில் தமது கதி மோட்சமான முன்னணியை உடைத்தது பற்றி சமசமாஜ கட்சியைத் தாக்கவேண்டிய அவசியம் ஆகியவற்றிற்கிடையே சிக்கி இருக்கும் அவர்களுடைய இக்கட்டான நிலைமை புரிந்துகொள்ளக் கூடியது.

அதுமட்டுமல்ல, திரிபுவாதக் கும்பல் உக்கிரமான கருத்து வேற்றுமைக்குள் அகப்பட்டிருக்கின்றது என்பது தெளிவு. உத்தியோக பூர்வமான அறிக்கை வெளிவருமுன் அதற்கு மாறான அறிக்கைகளை ஸ்டான்லி திலகரத்தின, சுவாமி சரணங்கரா ஆகியவர்கள் பிரசித்தமாக வெளியிட்டது இதற்கு உதாரணமாகும். தமது ஒரே கதி மோட்சமான அரசாங்கத்தில் சேரும் ஆசைக்கும், அரசாங்கம் தம்மை நிராகரித்தமையால் அதன் மேலுள்ள வெறுப்பினால் எழும் அதனை எதிர்க்க வேண்டும் என்கின்ற ஆசைக்கும் இடையே எழுந்துள்ள முரண்பாட்டினால் இந்தக் கும்பல் மத்தியில் பலமான அபிப்பிராயபேதம் எழுந்துள்ளது எனத் தெரிய வருகின்றது.

—8-ம் பக்கம் பார்க்க

## போராட்ட நிதி தாரீர்!

### நன்கொடையாளராகச் சேர வாரீர்

ஈழத்திருநாட்டு தொழிலாளி வர்க்கத்தினதும், முற்போக்கு சக்திகளினதும், இடதுசாரி இயக்கத்தினதும், மார்க்ஸிஸ்-லெனினிஸ்டுகளினதும் உரிமைக் குரலாக, உறுதிமிக்க படையாளியாக, வஜ்ர நேசனாக முன்னின்று உழைத்து வரும் 'தொழிலாளி', 'கம்கருவா' ஆகிய பத்திரிகைகளின் விற்பனையை மேலும் அதிகரிக்கவும், அவைகளுக்கு நன்கொடை சேகரிக்கவும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி தீர்மானித்துள்ளது. இதையொட்டி, ஜூலை மாதம் பூராவும் இயக்கம் நடத்தவும் மத்தியக் கமிட்டி முடிவெடுத்துள்ளது.

இன்றைய கட்டத்தில், எம் கட்சியின் சக்திமிக்க ஆயுதமாகவும், ஸ்தாபகனாகவும், பிரச்சாரகனாகவும் எமது பத்திரிகைகள் கடமையாற்றி வருகின்றன. இச்சக்தியை நாம் மேலும் பலப்படுத்த வேண்டும், பரந்து விரிவடைந்து சகல தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியிலும், வெகு ஜனங்களிடையேயும் செல்ல ஆவன செய்யவேண்டும். இந்த நன்நோக்கை அடிப்படையாகக் கொண்டே, ஒரு மாதம் பூராவும் பத்திரிகை வளர்ச்சி இயக்கம் நடத்த மத்தியக் கமிட்டி தீர்மானித்துள்ளது. இந்த இயக்கத்தில், கட்சித் தோழர்கள், வாலிபர் சங்க அங்கத்தவர்கள், அனுதாபிகள் ஆகிய அனைவரையும் பூரண பங்கெடுக்க அறைகூவி அழைக்கிறோம்.

ஜூலை மாதம் பூராவும் பத்திரிகை விற்பனையை அதிகரிக்க சகல தோழர்களும் முழு மூச்சாக ஈடுபட வேண்டும். பத்திரிகை விற்பனை செய்யப்படாத இடங்களில் பத்திரிகை விற்பனைக்கு ஏற்பாடு செய்யவும், வாசகர்கள் கூட்டங்கள் கூட்டவும் வேண்டுகிறோம். அதோடு, வீதி விற்பனையையும், ஸ்கோட் விற்பனையையும், சந்திகளில் நடத்தப்படும் விற்பனைகளையும் இரட்டிப்பாக்கச் சகல தோழர்களையும் வேண்டுகிறோம்.

—8-ம் பக்கம் பார்க்க

ஜூலை மாதத்தை 'பத்திரிகை வளர்ச்சி' இயக்க மாதமாக நடத்த இலங்கைக்கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி தீர்மானித்துள்ளது. இதையொட்டி, கட்சியின் ஸ்தாபன அமைப்பாளர் தோழர் நா. சண்முகதாசன் விடுத்துள்ள அறிக்கையை இங்கு வெளியிட்டுள்ளோம்.



சாலமுல்லை கட்சித் தோழர்கள் ஏற்கெனவே பத்திரிகை வளர்ச்சி இயக்கத்தில் ஈடுபட்டுவிட்டனர். சாலமுல்லை கட்சிக் கிளை செயலாளர் இங்கு பத்திரிகை விற்கிறார்.

## கூட்டரசாங்கத்தின் முதலாவது சட்டம்

**தலையங்கம்**

இலங்கைப் பிரஜைகள் வெளிநாடு செல்வதைத் தடுக்க மற்றுமொரு தடைச் சட்டத்தை ஆட்சியினர் இவ்வாரம் கொண்டுவந்துள்ளனர். இந்த அநீத ஜனநாயக விரோத சட்டம், ஈழத்திரு நாட்டு மக்களின் போக்கு வரவு உரிமைக்கு தரப்பட்ட பேரடியாகும்.

இப் புதிய சட்டத்தின் பிரகாரம், இதற்குப் பிறகு இந்நாட்டிலுள்ள எந்த ஸ்தாபனத்திற்கும் வெளிநாட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்ப முடியாது. அதோடு, வெளிநாட்டிலிருந்து எந்தவித அழைப்பையும் பெற முடியாது. இவ் அழைப்புகள் அனைத்தும் அரசாங்கத்திற்கு மாத்திரமே அனுப்பப்பட வேண்டும்.

அரசாங்கத்திற்கு அனுப்பப்படும் அழைப்பை ஏற்பதோ, நிராகரிப்பதோ, பிரதிநிதிகளில் யாரை அனுப்புவது என்று தீர்மானிப்பதோ, இவை யாவும் அரசாங்கத்தின் பொறுப்புக்கு விடப் பட்டுள்ளது. குறிப்பிட்ட ஸ்தாபனங்களுக்கும் அழைப்புகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

இதிலிருந்து நாம் அறிவதென்ன? எந்த ஸ்தாபனத்திற்கும், அவ்ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் நியாயமான உரிமையை ஆட்சியாளர் இச் சட்டத்தின் மூலம் மறுத்துள்ளனர். உண்மையில், இந்த சட்டத்தைக் கொண்டு இந்நாட்டிலுள்ள ஜனநாயக ரீதியாக ஸ்தாபிக்கப்பட்ட பொது ஜன ஸ்தாபனங்களுக்கு, குறிப்பாக தொழிற் சங்க ஸ்தாபனங்களுக்கு அவர்களுக்கு வேண்டிய பிரதிநிகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியாதவாறு செய்துள்ளது அரசாங்கம். ஜனநாயகத்திற்கு குழிதோண்டும் நடவடிக்கை இது.

இந்த சட்டத்தைக் கொண்டுவர ஆட்சியினர் என்னதான் காரணங்கள் கூறினாலும், இச்சட்டம் ஈழத்திருநாட்டு மக்களின் குடியுரிமைக்கு குழி தோண்டியுள்ளது என்பது மட்டும் உண்மையாகும்.

இதற்கு முன்னர், ஈழத்துப் பிரஜைகள் வெளிநாடு செல்வதையொட்டி அரசாங்கம் பல சட்டங்கள் கொண்டுவந்தது. வெளிநாடுகளுக்குப் பணம் கொண்டு செல்ல முடியாத சட்டம், 7 வருடங்களுக்கு ஒரு முறைதான், அதுவும் குறிப்பிட்ட தொகைதான் என்ற சட்டம். இப்படிப் பல.

இவைகளைத் தொடர்ந்து இன்று ஆட்சியினர் உருவாக்கியுள்ள சட்டம் இந்நாட்டுப் பிரஜைகளின் பிரயாண உரிமையை பரிபூரணமாகத் தடைசெய்துள்ளது. இந்த ஜனநாயக விரோத, அராஜக சட்டத்தை நாம் கடுமையாக எதிர்க்கிறோம்.

கூட்டரசாங்கம் ஏற்பட்ட பின்னர் கொண்டுவரப்பட்ட இந்த சர்வாதிகார சட்டத்தை உடனடியாக வாபஸ் பெறும்படி ஆட்சியாளரை வேண்டுவதுடன், இதை எதிர்த்துப் போரிடும்படி சகல ஜனநாயக ஸ்தாபனங்களையும் வேண்டுகிறோம்.

ஈழத்திருநாட்டு தொழிலாளி வர்க்கத்திற்கு சிறப்பான தலைமைதந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை திரிபுவாதக் கும்பல் திசைமாற்றி அழிவு மார்க்கத்தில் இட்டுச்செல்ல முனைந்தது. ஆனால், உண்மையான மார்க்சிஸ்ட் - லெனினிஸ்டுகள், வரலாறு கீர்த்திமிக்க எமது கட்சியை திரிபுவாதிகளின் படுநாசத்திலிருந்து காத்து வெற்றிகரமாக முன் நடத்திச் செல்கின்றார்கள்.

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 21-வது ஆண்டு விழா

ஜூலை மாதம் 3-ம் தேதி, வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மரதானை, சஹிராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

தோழர் பிரேமலால் குமாரசிரி, நா. சண்முகதாசன் மற்றும் பிரதான கட்சித் தலைவர்கள் பேசுவார்கள். தவறாது கலந்து கொள்க.

எமது வாலிபர் இயக்கத்தின் ஆதரவில் நடைபெறும்

கொழும்பு வாலிபர்

**உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி**

ஆரம்பவிழா வைபவம்

**18-7-64**

சனிக்கிழமை

**சுகததாச ஸ்டேடியத்தில்**

நடைபெறும்.

# விவசாய சங்கத்துக்கு புத்துயிர்

## புரட்சிப் பொறுப்போடு வழிநடத்த புதுத் தலைமை

அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் பிரதிநிதிகள் கூட்டமொன்று, ஜூன் மாதம் 7-ந் திகதி யூனியன் பிளேசில் தோழர் பிரேமலால் குமாரசிரி தலைமையில் நடைபெற்றது.

அகில இலங்கை விவசாய சம்மேளனத்தை, இத்தனை வருட காலமாக இருந்துவந்த அசமந்தப் போக்கிலிருந்து விடுவித்து இந்நாட்டின், விவசாய மக்களின் அவசியத் தேவைகளுக்குப் போராடும் பலமிக்க சக்தியாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதென சகல விவசாய பிரதிநிதிகளும் வலியுறுத்திக் கூறினர்.

விவசாயிகளின் சகல உற்பத்தி பொருட்களுக்கும் விலை நிர்ணயத்தை ஏற்படுத்துவது, அவ்விலைக்குப், பொருட்களைப் பெற்றுக்கொண்டு விற்பனை செய்யும் மத்தியஸ்தானத்தை அரசாங்கத்தால் ஏற்படுத்துவது, கடன் தொல்லைகளிலிருந்து விவசாய மக்களை விடுவிப்பது; நெற்காணிமசோதாவிலுள்ள விவசாயிக்கு சாதகமற்ற விதிகளைத் திருத்துவது, அறுவடைக் காப்புறுதி முறையை நாடு பூராவும் செயல்படுத்துவது, குடியேற்ற விவசாயிகளின் நிலங்களின் பூரண உரிமையை விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுப்பது ஆகியன போன்றஇந்நாட்டுவிவசாயமக்களை இன்று எதிர்நோக்கயுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களுக்கு நல் வாழ்வளிக்கும் வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக இந்த மாநாட்டின் போது விவாதிக்கப்பட்டது.

இத்தனை வருட காலமாக அகில இலங்கை விவசாய சம்மேளனத்திற்கு தலைமை ஸ்தாபனமொன்று இல்லாதிருந்த குறைபாட்டை நீக்கி, இச்சம்மேளனத்திலிருந்து எதிர்வரும் காலங்களில், சி. டி. யூ. எப். தலைமைக் காரியாலயத்தையே விவசாய சம்மேளனத்தின் தலைமை ஸ்தானமாகவும் கொண்டுசெல்வதெனத்தீர்மானிக்கப்பட்டது.

தோழர் ஆரியவன்ச குணசேகர தலைவராகவும், தோழர்கள் டி.என். நதுங்கே, எச். ஜி. ஏ. டி. சில்வா, ஜி, டி. குசில்ஹ, ஹிக்கொட தர்மசேன, ஆர். பொன்னையா, ஆகியோர் உப-தலைவர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். செயலாளர்களாக தோழர்கள் வில்பர்ட் ஜயக்கொடி, குலரத்ன விக்ரமசிங்ஹ ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். தோழர்கள் எம். டி. டெனியல், டி. யு. ஜயசேகரா, ஜி. எம். பெரேரா. டபிள்யு. டி. பி. ஜயசேகரா, டாக்டர் பி. விஜசேகரா, பிரேமலால் குமாரசிரி, பி. சார்லஸ் அப்புஹாமி, கொலின் எஸ். டி. சில்வா, எஸ். கிருஷ்ணகுட்டி ஆகியோர் செயற் குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

ஸ்தாபன அமைப்புச் செயலாளராக தோழர் டி. டி. பெரேரா நியமிக்கப்பட்டார்.

---

# காங்கேசன் சிமெந்துத் தொழிலாளர் போராடத் தயாராகிவிட்டனர்

### தொழிற்சங்க வரலாற்றின் படிப்பினைகள்

1946 ஜூலை 29-ம் திகதி அஸ்திவாரமிட்டு ஜூன் 1950-ல் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட சிமெந்துத் தொழிற்சாலையில், அன்றைய முதலாளித்துவ யூ.என்.பி. ஆட்சியின் வழக்கமான கொள்கையால், தொழிலாளியின் உரிமைகள் பல நசுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டு வந்தன.

தமிழ் காங்கிரஸ் தலைவரும் அன்றைய தமிழரின் ''தனிப்பெரும் தலைவரும்'' விடுதலை வீரரும் (போலி) ஆகிய ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் மந்திரியாகத் தனிராச்சியம் நடத்தி வந்தார்.

'ஆம், என்றால் அபராதம், 'இம்' என்றால் வெளியேற்றம். இப்படியான அடக்குமுறைகளுக்கு அஞ்சாது, கட்சியைச் சேர்ந்த சிலரின் முயற்சியால் சிமேந்துத் தொழிலாளர் சங்கம் என்ற பெயரில் ஓர் சங்கத்தை ஸ்தாபித்தோம். ஆனால், அச் சங்கம் சில மாதங்களிலேயே முறியடிக்கப்பட்டு சிசுவிலேயே கொலை செய்யப்பட்டது.

அதன் பிரதிபலன், எம் தோழர் சிலரை இழக்கவேண்டியதுர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. அத் தியாகத் தோழர்களைத் தொழிலாளர்கள் என்றுமே நினைவிலிருந்து அகற்ற மாட்டார்கள்.

மீண்டும் நாம் செயலற்று இருக்கவில்லை.

1955-ல் காங்கேசன் சிமேந்து உற்பத்தித் தொழிலாளர் சங்கம் என்ற பெயரில் ஓர் சங்கத்தை ஸ்தாபிக்க சி. டி. யூ. எப். பும் தோழர் சண்முகதாசனும் உதவிகளைச் செய்து, 681 என்ற பதிவு இலக்கத்தையும் பெற்றுக் கொடுத்தார்கள்.

இச் சங்கம் ஒரு வருடம் இயங்கி வருகையில் இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றம் எமக்கு மேலும் ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுத்தது. எம்மை எதிர்த்தவர்களும் எம்மைக் காட்டிக் கொடுத்தவர்களும் கூட எம்முடன் இன்று சேர்ந்து செயலாற்ற முன்வந்தனர்.

அப்போது கைத்தொழில் மந்திரியாக இருந்த திரு. வில்லியம் சில்வாவிடம் பேச்சுவார்த்தை நடத்தி, சில கோரிக்கைகளை வென்றெடுத்தோம்.

1957 ஜூன் 17,18,19ம்திகதிகளில் ஓர் வேலைநிறுத்தம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது. காரணம், அதுவரை காலம் அரசாங்கத்திலே சேவையாளராக இருந்த எம்மைக் கூட்டு ஸ்தாபனத் தொழிலாளராக மாற்றத் தீர்மானித்ததேயாகும்.

உண்மையில், அவ்வேளை எம் கட்சித் தோழர்கள் தலைமையில் சி.டி.யூ.எப். உதவியுடன் நடத்தி வெற்றிபெற்ற வேலை நிறுத்தத்தை அன்றைய இடதுசாரிகள் தற்போதைய மந்திரிகள் சிலரும் அவர்களின் கையாட்கள் சிலரால் தங்கள் பெயரில் விளம்பரப் படுத்திக் கொண்டார்கள். ஆனால், அவர்களின் போலிவேஷம் கலைய அதிக நாட்கள் செல்லவில்லை. வேலைநிறுத்தம் முடிந்து பல வருடங்களாகியும் இப்பக்கம் அவர்கள் தலைகாட்ட முடியாத அளவிற்குத் தொழிலாளர்கள் நிராகரித்து விட்டார்கள்.

பின் 1958-ல் பல கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்தோம். சி.டி.யூ.எப். ஆலோசனையின் பேரில் கூட்டுச் சபையையும், கைத்தொழில் மந்திரி திரு. சில்வாவையும் சி.டி.யூ. எப். தலைவருடன் பேட்டி கண்டு, மாதச் சம்பளம், பைசிக்கில் முற்பணம், வீட்டுவாடகை, 1956-ம் ஆண்டிற்கு போனஸ் (இது முன்பு கொடுபடவில்லை), விசேஷ பஞ்சப்படி ரூ. 17/50, உடுப்பு ஆகியவைகள் பெற்றெடுத்தோம். மாற்றம் செய்யப்பட்ட மாதச் சம்பளத்தில் சில குறைபாடுகள் இருந்தன. அதைத் திருத்த அன்றைய பிற்போக்குத் தலைவர் சில வகுப்புவாதிகளின் சூழ்ச்சியில் அகப்பட்டு, எஸ். ஜே. வி. செல்வநாயகம் எம். பி.யின் தலைமையில் சென்று குட்டையை குழப்பியதால் இன்றுவரை 13 நாள் சம்பளத்தை இழந்து வருகிறோம்.

1963 பிற்பகுதி தொடக்கம் சி.டி.யூ.எப்.புடன் இணைந்து செயல்படுவதெனத் தீர்மானித்துச் செயல்பட்டு வருகிறோம். சி.டி.யூ.எப்.பில் சேர்ந்தபின் புல்டோசர்த் தொழிலாளர் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டன. வேலை நேரத்தில் உத்தரவின்றி அதிபரைக் கூட்டமாகக் காணச்சென்று தொழிலாளருக்கு எவ்வித தண்டனையுமின்றி இந்தப் பத்திரம் வாபஸ் ஆக்கப்பட்டது. சம்பள உயர்வு கொடுக்கப்பட்டது; ஆனால், திருப்திகரமான முறையில் செய்யப்படவில்லை.

தோழர் சா. சந்தியாப்பிள்ளை
[செயலாளர், தொழிற்சாலைக் கிளை, காங். சிமெந்து உற்பத்தி தொழிலாளர் சங்கம்]

இப்போது தொழிலாளரின் ஒற்றுமையும் உற்சாகமும் மிக உத்வேகம் அடைந்திருக்கிறது. காரணம், நிர்வாகிகளின் வேண்டாத்தனம், நிர்வாக ஊழல், சர்வாதிகாரப் போக்கு, தொழிலாளரை அடிமைபோல் நடத்துவது போன்ற செயல்களால் தொழிலாளர்கள் மிகக் கொந்தளிக்கிறார்கள். தேநீர் சாலையில் இடியப்பத்திற்குச் சம்பல் கொடுக்க வேண்டுமென்றால் (சொதி மட்டுந்தான் கொடுப்பது வழக்கம்), பிழிந்த தேங்காய்ப் பூவில் கொடுப்பார்கள். சோற்றுப்பார்சல் கட்டாமல் மேசையில் வைத்துப் பரிமாறுங்களென்றால்'அப்படிக் கொடுத்தால் 3 கொத்துச் சாப்பிடுவார்கள்' என்பார்கள்!'சூழையின் கீழ் வேலை செய்ய முடியவில்லை ஐயா! மிகவும் சூடு; சப்பாத்து வேண்டும்' என்றால், 'உங்களுக்குச் சப்பாத்துப் போட்டு நடக்கத் தெரியாது' என்று நொண்டி நடந்து காட்டுவர்.

இது மட்டுமல்ல, சிறு சலுகைகளைக் கேட்டாலும், நீங்கள் இதுவும் கேட்பீர்கள் வேறு எதுவும் கேட்பீர்கள். இன்னும் கொஞ்சநாள் போனால் பெ......ம், கேட்பீர்கள் என்று பேசும் நிர்வாகிகளிடம் தொழிலாளர்கள் எதை எதிர்பார்க்க முடியும்? ஆகவே தொழிலாளர்கள் போராடத் துணிந்து விட்டார்கள்.

வெற்றி நிச்சயம்.

---

### ஆகஸ்ட் மாநாட்டிற்கு அறைகூவல்

# யாழ். வாலிபர்களுக்கு புதிய தலைமை

தமிழரசுக் கட்சியின் வகுப்புவாத-பிரிவினைவாத தவறான தலைமையிலிருந்து இளைஞர்களை மீட்டு சரியான ஒரு தேசியத் தலைமை கொடுத்துப் போராட ஒரு சக்திமிக்க இயக்கமாக எமது வாலிபர் இயக்கத்தைக் கட்டுவதற்கான அறைகூவலை விடுத்த 1963 மார்ச் 10-ம் திகதி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த எமது மாநாடு பெரும் வெற்றி கண்டுள்ளதுஎன்பதுபெருமைக்குரியதே.

இன்று ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்ட பலம் பொருந்திய ஒரே வாலிபர் இயக்கம் எமது வாலிபர் இயக்கம்தான் என்பதை எதிரிகளும் மறுக்க மாட்டார்கள். எமது இயக்கத்தைப் புறக்கணித்து, ஒதுக்கி வைத்துவிட்டு எதிர் சக்திகளால் எந்த விதமான ஒரு வெற்றிகரமான போராட்டத்தையோ, இயக்கத்தையோ நடத்த முடியாத ஒரு நிலையை எமது இயக்கம் ஏற்படுத்தியுள்ளது.

கூட்டு ஒத்துழைப்பு மூலம் ஏற்படுத்திக்கொண்ட சக்திமிக்க ஸ்தாபனம் தான் இத்தகைய ஒரு நிலைக்கு எமக்கு உதவியது.

இத்தகைய உயர்ந்த நிலையை எமது இயக்கம் அடைவதற்கு இடைக்காலத்திலும் தற்பொழுதும் திரிபுவாதிகளுக்கு எதிராகவும் கடும் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது. தொடர்ந்து நடத்த வேண்டியுள்ளது. சர்வதேசிய ரீதியிலும், தேசிய ரீதியிலும் எமது இயக்கம் இவர்களுக்கு எதிராக ஆரம்பித்த போராட்டத்தில்முன்னின்றுபோராடியது-போராடுகிறது.

தமிழரசுத்தலைமையிலிருந்து பல இளம் ஊழியர்களை வென்றெடுத்தும் தமிழரசு இயக்கத்தைத் தடுமாறும் நிலைக்குள்ளாக்கியும்-திரிபுவாதிகளின் சேற்றிலிருந்து எமது சம்மேளனத்தைப் பாதுகாத்துக் கொண்டு மார்க்ஸிய லெனினிஸ தத்துவத்தின் நேர்மையான புரட்சிகரப் பாதையில் முன்னேக்கிச் செல்லும் சரித்திரப் பிரசித்தி பெற்ற இக்கால கட்டத்தில் கூடவிருக்கும் எமது ஆகஸ்ட் மாநாடு, பிற்போக்குச் சக்திகள் மீண்டும் தலைதூக்குவதற்கு கழுகுப் பார்வையுடன் இருக்கும் அபாயகரமான நிலைமையையும் தனது கவனத்தில்கொண்டுள்ளது.

1964-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ம் 30-ம் திகதிகளில் எமது பிரதேச மாநாடு நடைபெறவிருக்கிறது. இம் மாநாடு, யாழ்-பிரதேசத்தில் சகல பகுதி வாலிபர்களையும் தலைமை தாங்கக்கூடிய பலம் பொருந்திய இயக்கமாக எமது இயக்கத்தை ஸ்தாபன ரீதியாகக் கட்டி வளர்க்கவும், அதற்கு ஏற்ற இயக்கம் எமது இயக்கம்தான் என்பதை நிரூபிப்பதற்கு எமது சக்தியைக் காட்டவும் பயன்படும்.

ஆகவே, இம்மாநாடு எத்தகைய சூழ்நிலையில் நடைபெறுகிறது, எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கவனத்தில்எடுத்து கீழ்க்கண்ட விதங்களில் தங்கள் ஒத்துழைப்பைத் தருவதன்மூலம் மாநாட்டின் வெற்றிக்கு உதவுங்கள்.

(1) தங்களால் இயன்ற பண உதவி புரிவதுடன், ஏனைய அனுதாபிகளிடமும், நண்பர்களிடமும் பணம் சேர்த்து அனுப்புதல்.

(2) உறுப்பினர்கள் சேர்க்கும் பணியில் ஈடுபட்டு புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது மூலம் அங்கத்துவத்தை அதிகரிக்கச் செய்தல்.

(3) நாட்டின் ஏனைய பகுதிகளிலிருக்கும் உங்களது நண்பர்கள், அனுதாபிகளுக்கு எழுதி உதவிகள் பெற்றுத் தருதல்.

(4) மாநாட்டு நிகழ்ச்சிகளையும், அதன் முக்கியத்துவத்தையும் பிரச்சாரம் செய்வதன் மூலம், மாநாட்டில் பெருந் தொகையான பிரதிநிதிகள் பங்குகொள்ள வைத்தல்.

பொறுப்பும், முக்கியத்துவமும் வாய்ந்த இம்மாநாட்டின் வெற்றிக்கு மேற்கூறிய விதங்களில் உங்கள் ஒத்துழைப்பைத் தர இன்றே முன்வாருங்கள்.

குறிப்பு;

(1) மாநாட்டிற்கான தயாரிப்புக் கூட்டங்களை ஜூலை மாதம் 1-ம் திகதியிலிருந்து 15-ம் திகதிக் கிடையில் ஒவ்வொரு வாலிபர் சங்கமும் கூட்ட வேண்டும், அதில் பிரதேசக் கமிட்டியின் சார்பில், பேச்சாளர்கள் கலந்துகொள்வர். இக்கூட்டங்களில் புதிய அங்கத்துவம் பதிவு செய்தல்

(2) நிதி சேர்த்தவர்கள் சேர்த்த நிதியையும், லிஸ்டையும் பொருளாளருக்கு 25-7-64 க்கு முன்பாக அனுப்பி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.

இது சம்பந்தமான தொடர்புகளை செயலாளரிடம் ஏற்படுத்திக் கொள்ளவும்.

புரட்சி வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,
தங்கள் தோழமையுள்ள,
(கே. ஏ. சுப்பிரயணியம்.)
செயலாளர்,
யாழ்-பிரதேச சபை.

# உயிருள்ள கவிதை

**சாமி. சிதம்பரனார்**

கற்பனையைவிட, உள்ள நிலையை அப்படியே எடுத்துச் சொல்ல வேண்டும்; அப்படிச் சொல்லுவதன் மூலம், படிப்பவர்களின் மனத்திலே பல படிப்பினைகள்-எண்ணங்கள்-நினைப்புகள் பிறக்கச் செய்யவேண்டும். இப்படி எழுதுவதுதான் சிறந்த எழுத்து என்பர்; இவ்வாறு கதைகளும், கட்டுரைகளும் எழுதுவோர் உண்டு. இம்முறையில் எழுதுவது ஒரு கலை என்பதில் ஐயம் இல்லை.

பாட்டானாலும் சரி, உரை நடையானாலும் சரி, படிப்பவர்களின் உள்ளத்தைக் கவர வேண்டும்; அந்த எழுத்திலே அமர்ந்து, விழித்துக் கொண்டிருக்கும் கருத்துக்கள் படிப்பவர்களின் உள்ளத்தை விடாமல் பற்றிக்கொள்ள வேண்டும். தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். இப்படி எழுதுவது தான் சிறந்த எழுத்து என்பதில் ஐயம் இல்லை.

உண்மையை எடுத்துக் காட்டி, உபதேசம் செய்கின்ற எழுத்தாளர்கள் பண்டும் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர். இவர்களுடைய எழுத்துக்கள்தாம், உயிர் பெற்ற ஓவியமாக என்றும் அழியாமல் நிலைத்திருக்கும் தன்மையுள்ளவை.

இத்தகைய பழம் பாடல் ஒன்றைக் காண்போம். கீழே குறிக்கும் அப்பழம் பாடலைப் பட்டினத்தார் பாடினார் என்று சொல்லப்படுகின்றது. அது ஒரு தனிப் பாடல். அந்தப் பாடலிலே கூறப்படும் கருத்து, பட்டினத்தாரின் கருத்தை ஒட்டியதாக அமைந்திருக்கின்றது. ஆதலால் அதைப் பாடியவர் பட்டினத்தார் என்று குறித்தனர் எனலாம்.

பட்டினத்தார், செல்வமுள்ளவராகச் சிறப்புடன் வாழ்ந்தார்; உலக வாழ்வு நிலையற்றது; இறந்த பின் இவ்வுலகில் நாம் தேடிவைத்திருக்கின்ற எந்தச் செல்வமும் நம்முடன் வரப்போவதில்லை என்ற உண்மையை உணர்ந்தார். உடனே கோவணத்தைக் கட்டிக் கொண்டு முற்றுந் துறந்த துறவியாக மாறினார். இதுதான் பட்டினத்துப் பிள்ளையாரின் கதை.

''செல்வத்தைத் துறந்து, உலக இன்பத்தைக் கைவிட்டுத் துறவியாவது தான் தொல்லை நீங்க வழி'' என்பது ஒரு தத்துவம். இந்தத் தத்துவம் ஏன் தோன்றியது? எதற்காகத் தோன்றியது? இந்த உண்மைகளைப் பலர் உணர்வதேயில்லை.

மனித சமூகத்திலே சிலர் தான் எல்லா இன்பங்களையும் பெற்று வாழ்கின்றனர். உழைத்தும் ஒரு பலனும் இல்லாமல் உள்ளம் வருந்தி, உடல் நலம் குன்றி வாழ்கின்றனர். இந்த ஏழை மக்கள் நிலையைக் கண்டு மனம் இரங்கிய அறிஞர்கள் இவர்களுக்கு நன்மை செய்ய எண்ணினர். அவர்கள் தங்கள் பெரிய குடும்பத்தையும் காக்கவேண்டியிருந்தது; குடும்ப பாரம் அவர்களை வேறு பணிகளில் செல்லவிடாமல் தடுத்து வந்தது. குடும்பம் அவர்களோடு ஒத்து நடக்க இணங்கவில்லை. மறுத்து மல்லாடவும் செய்தது. இந்த நிலையில் குடும்பத் தொல்லை உள்ளவரால் இடைவிடாமல் பொதுப்பணி செய்யமுடியாது என்ற முடிவுக்கு அந்த அறிஞர்கள் வந்திருக்க வேண்டும். அவர்களே, பொதுப் பணி புரியும் பொருட்டுத் துறவு நிலையை வலியுறுத்தியிருக்கவேண்டும். இது தான் துறவு பிறந்த உண்மைக் கதையாக இருக்கமுடியும்.

இந்த உண்மையை அறியாதவர்களே, தன்னலம் ஒன்றையே குறியாகக்கொண்டு துறவு பூணத் தொடங்கினர். இப்படித் துறவு பூணுவது உயர்ந்த தர்மம் என்பதை எடுத்துக் காட்ட என்ன என்னவோ வேதாந்த தத்துவங்களையெல்லாம் எழுதிவைத்தனர்.

துறவிகளிலே பலர், உழைத்துப் பிழைக்கும் திறமையில்லாமல் ஓடிப்போனவர்கள் என்பதில் ஐயம் இல்லை. தன்னலம் இல்லாமல் வாழ்ந்து, அல்லல்படும் மக்களுக்கு அறநெறிகளைப் போதிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் துறவை மேற்கொண்டவர்கள் சிலர் இருக்கலாம்; தமது உள்ளத்தாலும், உடலாலும், மனங் குமுறும் மக்களுக்கு உழைக்கவேண்டும் என்ற உறுதியுடன் துறவு பூண்டோரும் சிலர் உண்டு. இத்தகைய பரோபகாரத் துறவிகள் சிலர் இருப்பதனால்தான், துறவி வேடத்திற்குப் பொது மக்களிடையே இன்றும் மதிப்பு இருக்கின்றது.

இங்கே எடுத்துக் காட்டப்படும் தனிப் பாட்டு, துறவை-சந்நியாசங் கொள்ளுவதை ஆதரிக்கும் பாட்டுத்தான். ஆனால் எல்லோரையும் சந்நியாசி ஆகும்படி சொல்லவில்லை. முதலில் கடமையைச் செய் என்று கட்டாயப் படுத்துகிறது. கடமையைச் செய்யாவிட்டால்-செய்யத் திறமையில்லாவிட்டால் ஏன் தொல்லைப்படுகிறாய்? தொல்லையில்லாமல் மன அமைதியுடன் வாழ மார்க்கந்தேடிக் கொள் என்று தான் சொல்லுகின்றது.

நாப்பிளக்கப் பொய்உரைத்து
நவநிதியம் தேடி,
நலன் ஒன்றும் அறியாத
நாரியரைக் கூடிப்,
பூப்பிளக்க எழுகின்ற
புற்றுஈசல் போலப்
புலபுலெனக் கலகலெனப்
புதல்வர்களைப் பெறுவீர்!
காப்பதற்கும் வகை அறியீர்!
கைவிடவும் மாட்டீர்!
கவர் பிளந்த மாத்துளையில்
கால்நுழைத்துக் கொண்டே
ஆப்புஅதனை அசைத்துவிட்ட
குரங்குதனைப் போலே
அகப்பட்டீர்! கிடந்துஉழல
அகப்பட் டீரே.

இதுதானே மேலே எடுத்துக் காட்டிய தத்துவங்களுக் கெல்லாம் இடம் கொடுக்கும் தனிப் பாடல், இந்தப் பாடலைப் பட்டினத்தார், தம்மை ஆதரித்து வந்த இளைஞர் ஒருவர் திருமணம் புரிந்து கொண்டபோது பாடினாராம். இந்தப் பாடலைப் பற்றி வழங்கும் கதை இதுதான்.

இந்தப் பாடலைப் படிக்கும் போது நமக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இன்று கருத்தடைப் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும் நமது நண்பர்களுக்கு இதை ஒரு பரிசாக அனுப்பலாம் என்பதுதான் அந்த யோசனை. ஏனென்றால் அளவுக்கு மேல் பிள்ளைகளைப் பெறாதீர்கள் என்ற கருத்தும் இந்தப் பாடலில் அடங்கியிருக்கின்றது. ஆதலால் தான் இந்த யோசனை.

இந்தப் பாட்டின் பொருளை நன்றாக விரிவாக எண்ணிப் பார்த்தால் பாட்டின் அருமை விளங்கும். பாட்டில் அமைந்திருக்கும் பண்பும் காணப்படும்.

''செல்வங்களையெல்லாம் தேடுவதில் முனைகின்றீர்கள்; என்னென்ன செல்வங்கள் உண்டோ அவ்வளவும் வேண்டும் என்பதுதான் உங்கள் ஆசை. ஆதலால் எப்படியாவது செல்வங் குவிந்தால் போதும்; செல்வங் கிட்டினால் போதும்; என்ற குறிக்கோளுடன் உழைக்கின்றீர்கள். செல்வத்தை அறநெறியிலே தான் சேர்க்கவேண்டும் என்ற தர்மத்தை மறந்துவிட்டு எதையும் செய்து செல்வத்தைச் சேர்க்கின்றீர்கள். சதா பொய்யையே பேசி, பணத்தைத் தேடுகின்றீர்கள்.

''நன்மை இன்னது, தீமை இன்னது என்பதை அறியாத பல பெண்களுடன் கூடி வாழ்கின்றீர்கள். பூமி பிளக்கும்படி உயர்ந்த புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதைப்போலப் பிள்ளைகளைப் பெற்றுத் தள்ளுகின்றீர்கள். எத்தனை பிள்ளைகளை நம்மால் காப்பாற்ற முடியும்? ஏராளமான பிள்ளைகள் பிறந்துவிட்டால் என்ன செய்வது? நம்முடைய பிள்ளைகளை நம்மைவிட நல்ல நிலையிலே வாழும்படி வைக்கவேண்டாமா? என்ற பொறுப்புணர்ச்சியே இல்லாமல் புல புல, கலகல என்று பிள்ளைகளை உதிர்த்துத் தள்ளுகின்றீர்கள். பெற்ற பின் அந்தப் பிள்ளைகளைக் காக்க வழியறியமாட்டீர்கள். பிள்ளைகளை வேறு யாராவது காப்பாற்றட்டும் என்று கைவிடவும் மாட்டீர்கள். ஏன் இப்படிச் செய்கின்றீர்கள்?

''இரண்டாகப் பிளந்திருக்கின்ற மரப் பிளவையைக் கண்ட ஒரு குரங்கு அந்தப் பிளவிலே காலை விட்டதாம். அந்தப் பிளவிலே வைத்திருந்த ஆப்பை அசைத்து எடுத்துவிட்டதாம். அதனால் பிளவு ஒன்று சேர்ந்தது. அதன் கால் பிளவுக்குள் அகப்பட்டது. நெருக்குண்டு நசுங்கிற்று. அதுபோல் நீங்களே இந்தக் குடும்பத் தொல்லையைத் தேடிக்கொண்டு துன்பப்படுவது ஏன்? குடும்ப வலையில் மாட்டிக்கொண்டு திக்குமுக்காடித் திணறி விழிப்பது ஏன்? வீணாக விழிக்க வேண்டாம்.''

இதுதான் இந்தப் பாட்டிலே அமைந்திருக்கும் பொருள். பாட்டு வேதாந்தப் பாட்டாயிருந்தாலும் இதிலே சில கருத்துக்களும், நல்ல சொற்றொடர்களும், உவமை நயமும் அமைந்திருப்பதைக் காணலாம்.

உள்ள நிலைமையை அப்படியே எடுத்துக்கூறும் பாட்டுத்தான் இது. ஆயினும், இதில் சில உபதேச மொழிகளும்-அதாவது அறிவுரைகளும் அடங்கி யிருப்பதைக் காணலாம்.

1. பொய்யுரைத்துப் பொருள் தேடாதீர்கள்; லஞ்சம் வாங்காதீர்; கறுப்புச் சந்தையிலே பொருள் தேடாதீர்கள்.

2. பல பெண்களை மணந்து கொள்ள வேண்டாம். பல பெண்களை மணந்து, ஏராளமான பிள்ளைகளைப் பெற்றுத் தள்ளவேண்டாம். ஒரு மனைவியிருந்தால் போதும்; அளவோடு பிள்ளை பெறுங்கள்; பெற்ற பிள்ளைகளைப் பொறுப்புடன் காப்பாற்றுங்கள்.

3. பல பெண்களை மணந்து, ஏராளமான பிள்ளைகளை ஈன்று, தொல்லைப்படுவது நீங்களாகவே தேடிக்கொள்ளும் தொலைல்தான். ஆதலால் அறிவுடன் நடந்துகொள்ளுங்கள்.

இத்தகைய மூன்று அறவுரைகள் இச்செய்யுளில் அமைந்திருக்கின்றன.

பல பிள்ளைகளைப் பெறுவதற்குப் புற்றிலிருந்து புறப்படும் ஈசல்களை உவமை காட்டப்பட்டுள்ளது. தானே தேடிக்கொள்ளும் தொல்லைக்கு மரப் பிளப்பிலே காலை விட்டுக்கொண்டு, ஆப்பை எடுத்துவிட்ட குரங்கு உவமையானது. இவ்விரண்டு உவமைகளும் பொருத்தம் உள்ளவை.

''புலபுல என, கலகல எனப் புதல்வர்களைப் பெறுவீர்'' என்ற தொடர் மிகவும் அழகான தொடர்.

பாட்டின் கருத்து நமக்குப் பிடிக்கலாம்; பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் இது ஒரு சிறந்த இலக்கியத் தன்மை பொருந்திய பாட்டு என்பதில் ஐயம் இல்லை. இக்கால நிலைக்கு ஏற்றபடியும் பொருள் சொல்லும்படியும் அமைந்திருப்பது தான் இப்பாட்டின் சிறப்பு. இது தான் உயிருள்ள பாட்டு என்பது.

# பழி எனக்குத்தான்

இக் கவிதை 1000 வருடங்களுக்கு முன்னர் ஒரு கொரிய கவிஞரால் எழுதப்பட்டது. ஒரு விலை மகளின் உள்ளக் குமுறலே கவிதையின் உயிரோட்டம். கொரிய நாட்டு சாக்கடைச் சமுதாயத்தை இழிவுபடுத்தும் இக் கவிதை சர்வலோகத்துக்கும் பொதுவானது.

ரொட்டிக் கடைக்குப் போகிறேன்
ரொட்டி ஒன்று வாங்குகிறேன்,
கிழட்டு ரொட்டிக் கடைக்காரர்
என் கையைப் பிடிக்கிறார்.

இந்தக்கதை வெளியே தெரிந்தால்,
சிறு மலரே, பழி உனக்குத்தான்.
ஆம், ஆம், அவரது
தோட்டக் குடிலுக்குப் போவேன்.
—ரகசியமாக.

கோவிலுக்குப் போகிறேன்,
விளக்கை ஏற்றுகிறேன்,
பெரிய குருக்கள் என்
கையைப் பிடிக்கிறார்.

இந்தக் கதை வெளியே தெரிந்தால்
கற்றுக்குட்டியே, பழி உனக்குத்தான்,
ஆம், ஆம், அவரது
கோயில் அந்தப்புர அறைக்குப் போவேன்
—ரகசியமாக.

உணவு விடுதிக்குப் போகிறேன்,
காப்பி வாங்கிக் குடிக்கிறேன்,
விடுதிக்காரர் என்கையைப் பிடிக்கிறார்.

இந்தக்கதை வெளியே தெரிந்தால்,
சின்னக் கிண்ணமே, பழி உனக்குத்தான்.
ஆம், ஆம், அவரது
தோட்டக் குடிலுக்குப் போவேன்,
—ரகசியமாக

## மார்க்ஸிய வகுப்பில்

# மாணவர் 500 பேர்

சாதாரண தொழிலாளர்களுக்கு மார்க்ஸிஸ வகுப்பினை நடத்திய குற்றத்திற்காக திரிபுவாதக் கூட்டம் சென்ற ஆண்டில் தோழர் சண்முகதாசனுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தது.

சாதாரண உழைப்பாள மக்களும், விவசாய மக்களும், நடுத்தர வகுப்பினரும் மார்க்ஸிஸம் கற்று சிந்திக்கத் தொடங்கிவிட்டால், தமது பாடு பெரும் பாடாகிவிடும் என்று அறிந்த திரிபுவாதக் கும்பல் தோழர்கள்மீது இந்த நடவடிக்கை எடுத்தது புதுமையில்லை, தோழர் சண்முகதாசன்மீது நடவக்கை எடுப்பது மூலம், சாதாரண மக்கள் மார்க்ஸிஸம் பெறுவதை நிறுத்திவிடலாம். சண்முகதாசனையும் உழைப்பாள மக்களிடமிருந்து ஒதுக்கிவிடலாம் என்று திரிபு வாதக்கூட்டம் மனப்பால் குடித்தது.

ஆனால், கடந்த 16-ந் தேதி தோழர் சண்முகதாசன் நடத்திய முதல் மார்க்ஸிஸ வகுப்பைத் திரிபுவாதக்கூட்டம் கண்டிருந்தால், அவர்களுக்கு பேதி அடித்திருக்கும்.

ஆம்! முதல் தடவையாக இலங்கையில் மார்க்ஸிஸ தத்துவ வகுப்பொன்றில் கலந்து கொள்ள 500-க்கு மேற்பட்ட மாணவர்கள் வந்தது இதுவேயாகும். இவர்களில் பெரும்பாலோர் தொழிலாளர்களாக இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மார்க்ஸிஸ போதனைக்கு அங்கத்தவர்களுக்கு மட்டும் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இதில் மார்க்சிஸம் கற்க ஆர்வமுள்ள சகல பகுதி மக்களும் சேரலாம். மாதக் கட்டணம் சதம் 25.

முதல் வகுப்பில் 500 பேர்களுக்கு மேல்கலந்துகொண்டனரெனினும், இதுவரை 600 க்கு மேற்பட்டவர்கள் மார்க்ஸிஸ போதனைக் குழுவில் சேர்ந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# அமெரிக்க யுத்த வெறிக்

## கொரிய நாட்டை

1957-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் கொரியாவெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்து, கொரிய மக்களின் பிரச்சினைகளை நேர்முகமாகவே கண்டறிந்த தோழர் மூஹிதீன், இக்கட்டுரையில் கொரிய மக்களின் யுத்தகால பின்னணியையும், இன்றைய நிலையையும், எதிர்கால திசை மார்க்கத்தையும் இரத்தினச் சுருக்கமாக விளக்கியுள்ளார்.

என் அன்புக்குரிய நண்பரும் தலைசிறந்த சீன எழுத்தாளருமான யங் சூ, கொரியாவைப் பற்றிய தனது அருமையான நாவலில், அதை ''ஆயிரம் மைல்கள் கொண்ட அழகு நாடு'' என்று வர்ணித்துள்ளார். ஆனால், கொரியா செல்லு முன்னர் இந்த வர்ணனையை நான் வெறும் கற்பிதமாகவே எண்ணியிருந்தேன். ஆனால், கொரியாவில் சில வாரங்கள் சுற்றுப்பிரயாணம் செய்த பின்னர் எனது கருத்தை முற்றாகவே மாற்றிக் கொள்ளவேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது.


கொரியாவில், எல்லாருக்குமே தெரிந்த ஒரு பாடலுண்டு. கொரிய நாட்டை நாலே நாலு வரிகளில் படம் பிடித்துக்காட்டும் அந்த அருமையான பாட்டின் தமிழாக்கம் இதோ:

''ஆயிரம் ஆண்டைய
வரலாறு மிக்க
அழகினைக் கொண்ட
ஆயிரம் மைல்கள்
திக்கெங்கும், திசையெங்கும்
குன்றுகள் தோறும்,
திரிசுடர் ஒளிதரும்
சிரஞ்சீவிப் பூக்கள்,
திவ்யமாய் ஜொலித்திடுமெம்
தாயகக் கொரியா,
அழகுக்கு அழகுதரும்
பேரழகு நாடு.''

இந்தப் பாட்டையும் மிதமிஞ்சிவிட்ட அழகினை நான் கொரியாவில் கண்டேன். இலங்கையைப்போன்று அழகின் சிகரத்தை எட்டிப் பிடிக்கும் மலைச்சாரல்களும், அடிவானத்துடன் முத்தமிட்டு விளையாடும் கடலலைகளைப் போன்று, மிருதுவான இளவேனிற் தென்றலின் ஸ்பரிசத்தால் உடல் சிலிர்த்து. அசைந்து அசைந்து, நாணத்தால் தலைகுனியும் பச்சைப் பசுமேனித் தானியங்களும், கண்கண்ட இடமெல்லாம் பூத்துக்குலுங்கி புதுமணம் அள்ளி வீசும் பொன்னிற மலர்களும், கொரிய அன்னையின் சௌந்தர்யத்தை இரட்டிப்படையச் செய்கின்றன.

இன்று வட கொரியா-தென் கொரியா என்று இரு கூறு போடப்பட்டுள்ள இப்பேரழகு நாடு, பசிபிக் சமுத்திரத்தையொட்டிய ஜப்பானியக் கடலின் மேற்குப் பகுதியில், சீனத்திற்கு வடகிழக்கில் இருக்கிறது. இலங்கையைப் போன்ற இருமடங்கான நிலப் பரப்பைக்கொண்ட இந்நாட்டின் ஜனத்தொகை 3 கோடியாகும். இதில் ஒரு கோடி 80 லட்சம் ஜனத்தொகை வட கொரியாவிலும், ஒரு கோடி 20 லட்சம் ஜனத்தொகை தென்கொரியாவிலும் இருக்கின்றன.

இலங்கையிலுள்ள பெரும்பான்மையான மக்களுக்கு மட்டுமின்றி, உலகிலுள்ள பலருக்கும்கூட, நீண்ட நெடும் தொலையிலுள்ள இந்த அழகு மிக்க நாடு, கற்பனை செய்து கூடப் பார்க்கமுடியாத தூரந்தொலை நாடாகவே நீண்டகாலம் இருந்தது.



கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசின் பிரதமர் தோழர் கிம் இல் ஸுங்.

1950-ம் ஆண்டு கொரிய யுத்தத்திற்குப் பின்னரே, கொரியா உலக மக்களைக் கவரத் தொடங்கியது. மிக மிகச் சொற்ப காலத்திலேயே மாந்தர்குலம் அனைத்துமே நன்கறிந்த பரிதாபத்திற்குரிய நாடக மாறியது.

கொரியாவின் யுத்த கால சரித்திரம் உண்மையில் 1945ம் ஆண்டிலேயே ஆரம்பமாகியது. ஜப்பானியர்கள் கையில் நீண்ட காலம் அடிமைப் பட்டுக்கிடந்த கொரியா, இரண்டாவது உலக யுத்தத்தின் பின் விடுதலை அடைந்தது. சர்வதேசக் கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொரியா சுதந்திரமாக வளரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், இந்த முடிவுக்கு முரண்பட்ட ரீதியில், அமெரிக்கர்கள் பலாத்காரமாக தென்கொரியாவில் நுழைந்து தமது காலனி ஆதிக்கத்தை ஸ்தாபித்தார்கள். நாலு ஆண்டுகளில் பத்துக்கு மேற்பட்ட ராணுவ அடக்குமுறைச் சட்டங்களைத் தென்கொரிய மக்கள் மீது திணித்து, அவர்களை அடிமைப்படுத்தினர். அமெரிக்கரின் இந்த வாலாட்டத்திற்கு இசை மீட்டினன் கொரிய மக்களின் தாயக சத்துரு சிங்மன் ரீ. இந்த நாலு ஆண்டுகளில் அமெரிக்கர் தென் கொரியாவில் 478,000 பேர்களைச் சிறை பிடித்தனர். 93,000 பேர்களை முற்போக்குவாதிகள் என்ற காரணத்தைக்கொண்டு சுட்டுக்கொன்றார்கள்.

தென் கொரியாவை தமது ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்த அமெரிக்கர், 1949-ல் சிங்மன் ரீயின் உதவியுடன் சுதந்திரமாக முன்னேறி வந்த வடகொரியாமீதுபாய்ந்தனர். ஐக்கிய நாடுகள் அமெரிக்கர்களுக்கு ஆதரவுதந்தது. 20 நாடுகளின் ராணுவங்கள் வட கொரிய வீரர்களை அடக்க முயன்றன. முடிவு என்ன? 20 நாடுகளின் துருப்புக்களும், சக்திமிக்க அமெரிக்கப் படையும் கூடவே, வட கொரிய வீரத் தியாகிகளின் உள வலுவின் முன் தோற்று தன்மானமிழந்து ஓடின.

இந்த யுத்தத்தில் அமெரிக்கர் நடத்திய அக்கிரமங்கள், உலகில் இதுவரை எந்த நாடுமே செய்யாத அளவில் கீழ்த்தரமாக, படுபாதகமாக இருந்தன.

அமெரிக்கர் வடகொரிய மக்களை எந்த அளவில் கொன்று குவித்திருப்பார்கள் என்பது, 1952-ம் ஆண்டில் கொரியா வந்த அமெரிக்கத் துருப்புகளுக்கு அதன் தலைவர் ஆற்றிய முதல் சொற்பொழிவிலிருந்து தெரியவரும். அமெரிக்கத் தலைவரின் 'புத்திமதி' இது:

''அமெரிக்க வீரர்களே, உங்கள் வழியில் வரும் எந்த வட கொரியனையும் தயவு தாட்சண்யமின்றிக் கொல்லுங்கள். சிறு குழந்தையாக இருந்தாலும் சரிதான், முது கிழவராக இருந்தாலும்சரிதான் பாபம் என்பதையே பார்க்காதீர்கள். கொல்லும் வேளையில் உங்கள் கைகள் நடுங்கக்கூடாது. நீங்கள் எவ்வளவுக்கு அதிகமாகக் கொரியர்களைக் கொல்கிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு நீங்கள் சிறந்த அமெரிக்கப் பிரஜைகளாவீர்கள்.''

அமெரிக்க வெறியர்கள் மனிதர்களை மட்டும் கொல்லவில்லை; நாட்டையும் அழித்து வந்தார்கள். குண்டுமாரி பொழிந்து அவர்கள் விளைத்த சேதங்கள் சொல்லி முடியாது. 8,700 பெக்டரிகள் தரைமட்டமாயின. 600,000 மூன்றடுக்கு குடியிருப்பு கட்டிடங்கள் நிர்மூலமாயின. 500 பள்ளிக் கூடங்கள், 1000 ஆஸ்பத்திரிகள், 263 கலாச்சார நிலையங்கள் லட்சக்கணக்கான தனி வீடுகள் அனைத்தும் மண்ணோடு மண்ணாயின.

என்னைப்பொறுத்தமட்டில், நான் கொரியாவை ஒரு அழகுக் காவியமாகக் கருதுகிறேன். அருமைமிகு இவ்வழகு காவியம் துன்பியல் பின்னணி கொண்டு உருவானது. இதுவரை அது பாதி முடிவுற்றுள்ளது. ஆனால், இந்த அழகுக் காவிம் பூரணத்துவம் பெற்று அமர காவியமாக, இதன் முடிவு அவசர அவசியமாகத் தேவைப்படுகிறது. கொரிய திருநாட்டில் சுற்றுப்பிரயாணம்செய்த நாட்களில், நான் ஒரு உண்மையை ஐயந்திரிபறக் கண்டேன். ஆம், இவ் அமர காவியத்தின் பூரணத்துவத்திற்கான முடிவுக்கட்டம் நெருங்கி வருகிறது. இந்தப் பொன்னான பாதையில் கொரிய மக்கள் அயராத தங்கள் பயணத்தை துவக்கிவிட்டார்கள், இக்கொரிய காவியத்திற்கான நல் முடிவு நிச்சயம் வந்தாகும். அதன் முடிவை, பூரணத்துவத்தை எந்த சக்தியாலும், எந்தக் குண்டுகளாலும், அமெரிக்க யுத்த வெறியரின் அணு, ஜலவாயு குண்டுகளினால் கூட அழித்துவிட முடியாத பிரமாண்ட சக்திநிலை இன்று அங்கு தோன்றியுள்ளது.

ஜூன் மாதம் 25-ந் தேதி கொரிய தி
கொரிய யுத்தத்தின் முடிவை யொட்டி ச
தம் அன்றுதான் உருவாயிற்று. இந்தத்
கெங்கணுமுள்ள சமாதான விரும்பிகள்,
ஆபிரிக்க மக்கள் கொண்டாட வேண்டுமெ
ரிக்க நட்புறவு இயக்கத்தினர் வேண்டுகே
ளனர். கொரியப் பிரச்சினையின் பூரண மு
கட்டையாக இருக்கும் அமெரிக்க வெறி
வெளியேற்றத்தைக் கோருவதே இத்தி
படைக் கோஷமாக அமையவேண்டும்.
யொட்டி இக்கட்டுரையை இங்கு பிரசு

இந்த அழகு நாடு, பார்ப்போர் உள்ளத்தை நெக்குருகச்செய்யும் படுநாசத்திற்கு ஆளாகியது உலகறிந்ததே. பச்சைப் பசேலென்று, பகல் சூரியனின் ஒளிக்கதிர்களில் சிக்கித் தங்கமாக அசைந்தாடிய நெற்கதிர் நிலங்களினூடே, காணுமிடமெல்லாம் உருவெடுத்திருந்த பாதாளக் கிடங்குகள், அவைகளை அணைத்தவாறே, கருகிச் சாம்பலாக உருமாறியிருந்த தாவரக் கதிர்கள் விஷக்காற்றில் சிக்கி உயிர் சக்தியிழந்து அணு அணுவாக செத்துவரும் பெரும் பெரும் பட்டை மரங்கள், இதுபோன்ற எண்ணரிய காட்சிகள் அங்கு செல்வோரின் உள்ளத்தை நெகிழச் செய்யும் ஆற்றலுடையன. நான் கொரியாவில் இருந்த சொற்ப நாட்களில் வடகொரி

யத் தலைந
முதல் தெ
யான சுயி
பல ஆயிர
பார்த்தே
ஆண்டான்
வளர்த்த
கள், இலச்
சித்திர ம
அழகு
கலை மண்ட
உடைந்து
மாகிக் கிட
ரங்கள்,
விட்டதொ
லெல்லாம்
யாத வடு
கொரியத்
யத்தை பி
பீறிட்டு ஓ

அந்த காட்
சகிக்காது.
கொலைத்
கொடுமை
பாதகத்தை
யாராக இ
அவர்கள் அ
மிராண்டிக
வருமே மனி
ச்சிக்கு இ
ஜன்ம சத்து
குலத்தின்
ன்கள் என்ற
தான் என
தோன்றிய

கொரிய
ஆண்டில்
ஆண் டில்
இந்த
கொரியத்
பார்க்க மு
வேதனைக்கு



## கொ

அமெ
கு
25-ந் தேதி
ரமிப்பு யு
இம்மாதம்
11 வருட
டன.

இவ்வாண்
முள்ள சமா
ஆயிரமாயிர
ஜூன் 25
ஜூலை 2
''தென் கெ
அமெரிக்க
டம் உடன
வேண்டும்

அமெரிக்கக்
அழிக்கப்பட்டு
நகரம் பிண
கும்

# றிக் கும்பலே வெளியேறு

## ட்டை கொரிய மக்களே ஆளட்டும்

ரம் செய்த
ஒரு உண்
பறக் கண்
மர காவி
துவத்திற்
நெருங்கி
பான்னுன
ப மக்கள்
பணத்தை
ள், இக்
ற்கான
வந்தா
வை, பூர
சக்தியா
களாலும்,
வறியரின்
டுகளினுல்
முடியாத
ல இன்று
ாது.

யத் தலைநகரான பியோங்யாங் முதல் தென் கொரிய எல்லையான சுயி ஸொங் வரையும் பல ஆயிரம் மைல்கள் சென்று பார்த்தேன். கொரிய அன்னை ஆண்டாண்டுகளாகக் கட்டி வளர்த்த கலைப்பொக்கிஷங்கள், இலக்கியச் செல்வங்கள், சித்திர மணிக் கூடங்கள், அழகு வேலைப்பாடமைந்த கலை மண்டபங்கள் எல்லாம் உடைந்து தகர்ந்து தரைமட்டமாகிக் கிடந்தன. நாடு, நகரங்கள், வீடும் முற்றமும் விட்டதொட்ட இடங்களிலெல்லாம் குண்டுகளின் அழியாத வடுக்கள். இவைகள் கொரியத் தாயின் இதையத்தை பிளந்து இரத்தத்தை பீறிட்டு ஓடச்செய்திருந்தன.

-ந் தேதி கொரிய தினம் வருகிறது.
ன் முடிவை யொட்டி சமாதான ஒப்பந்
உருவாயிற்று. இந்தத் தினத்தை உல
சமாதான விரும்பிகள், குறிப்பாக ஆசிய
கொண்டாட வேண்டுமென்று ஆசிய-ஆபி
இயக்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்
பிரச்சினையின் பூரண முடிவுக்கு முட்டுக்
கும் அமெரிக்க வெறியரின் உடனடி
க் கோருவதே இத்தினத்தின் அடிப்
க அமையவேண்டும். இத்தினத்தை
கட்டுரையை இங்கு பிரசுரிக்கிறோம்.

, பார்ப்
நெக்குரு
சத்திற்கு
ிந்தது.
, பகல்
களில்
சைந்தா
ங்களி
மல்லாம்
ாதாளக்
வகளை
கிச் சாம்
த தாவ
காற்றில்
ிழந்து
துவரும்
— மரங்
ண்ணரிய
சல்வோ
கிழச்
டையன.
ிருந்த
-கொரி

அந்த காட்சியைப் பார்க்கவே சகிக்காது. இந்தக் கோரக் கொலைத் தாண்டவத்தை, கொடுமை மிகு அழிவுப் படுபாதகத்தை செய்தவர்கள் யாராக இருந்த போதிலும், அவர்கள் அனைவருமே காட்டுமிராண்டிகள்; அவர்கள் அனைவருமே மனித இனத்தின்வளர்ச்சிக்கு இடையூருக நிற்கும் ஜன்ம சத்துருக்கள், மக்கள் குலத்தின் பரம வைரிகள்-யமன்கள் என்று உரத்துக் கூறத்தான் எனக்கு அவ்வேளையில் தோன்றியது.

கொரிய யுத்தம் 1950-ம் ஆண்டில் துவங்கி 1953-ம் ஆண்டில் முடிவுற்றது. இந்த மூன்ருண்டுகளிலும் கொரியத் தாய் எண்ணிப் பார்க்க முடியாத அளவு வேதனைக்கு ஆளானள்.

கொரியாவுக்கு 1956ல்சென்ற அமெரிக்க எழுத்தாளர் எமின் கெலொக்கினது வார்த்தைகளில், ''கொரியாவில் மனிதர்கள் மட்டுமின்றி, இயற்கையும் கூடவே அழிவிலும், நாசத்திலும் சிக்கித்துவண்டது'' எனலாம்.

என்ருலும், உள்ள உறுதியும், லட்சியப் பொறுப்பும். கடமையுணர்ச்சியும் மிக்க வட கொரிய மக்கள் தாயகத்து சத்துருக்களை தலைநிமிர்ந்து நின்று போராடி விரட்டி அடித்தனர். அழிந்த செல்வங்களை மீண்டும் சிருஷ்டிக்க முயன்றனர். இன்று கொரியாவெங்கும் நிர்மாண ஆக்க வேலைகள் இயங்குகின்றன. அழிவின் கோரம் மறைந்து வருகிறது. கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ், சோஷலிஸ சமுதாய அமைப்பில் வட கொரிய மக்கள் இன்று ஜாம் ஜாமென 'ஸ்பூட்னிக்' வேகத்தில் முன்னேறி வருகின்றனர்,

67 முறை குண்டு பொழியப்பட்டு கருகிச் சாம்பலாகிக் கிடந்த தங்கள் தலைநகரமான பியோங்யாங்கை,ஐந்துஆண்டுகளில் வட-கொரிய மக்கள் அழகுமிக்க ஆசிய நகரங்களில் ஒன்ருகக் கட்டி விட்டனர். பியோங்யாங் வட்டாரத்தில் மாத்திரம் கடந்த சில ஆண்டுகளில் 6000 பேக்டரிகள் கட்டப்பட்டுள்ளன. பள்ளிக்கூட நிர்மாண வேலைகள் இப் பகுதியில் மட்டும் 2600க்கு அதிகரித்துள்ளன. ஆஸ்பத்திரிகள் 500 கட்டப்பட்டுள்ளன.

இன்று வட கொரியாவில் வேலையில்லாது திண்டாடுவோர் யாருமில்லை. தொழிற்துறையில், இரும்பு, எஃகு, மருந்து உற்பத்தியிலும் மற்றும் பல கனப் பொருள் உற்பத்தியிலும் தொழில் துறையில் உலக முதலாளித்துவ முன்னணி நாடுகளில் ஒன்ருக விளங்கும் ஜப்பானையும் வட கொரியா முன் தாண்டிவிட்டது. சொந்தமாக, உள்நாட்டிலேயே ஆகாய விமானம், கார், லொரி மற்றும் பல ரக வாகனங்கள், யந்திரங்கள் உற்பத்தி செய்யும் அளவுக்கு வட கொரியா வளர்ந்தோங்கி விட்டது.

இதே வேளையில் தென் கொரியாவில், அமெரிக்க காலனி ஆதிக்கத்தின் கீழான ஆட்சியில் அடிமைத்தளை கூடுகிறது. வறுமை இரண்டு மடங்கு அதிகரித்து மக்களை வாட்டி வதைக்கிறது. வேலையில்லர் தோரினதும் அரை குறை வேலையுள்ளோரினதும் தொகை 42 லட்சத்திற்கு இன்று அதிகரித்துள்ளது.மேல் தென் கொரிய அரசாங்க அறிக்கைப்படியே, இன்று அங்கு 600,000 தாய்மார்கள் வாழ வழியின்றி தெருக்களில் ஜீவிக்கின்றனர். 30 லட்சம் வியாதியஸ்தர்கள் ஆஸ்பத்திரிகள்இல்லாததால் தமது கடைசி மூச்சுக்களை விட்டுக் கொண்டிருக்கின்றனர். 4 லட்சம் கொரியர்களுக்கு தஞ்சம் புக இல்லமில்லை.

அமெரிக்க வெறியரின் காலனி ஆதிக்கத்தில் சிக்கித் தடுமாறும் தென்-கொரியா மக்கள் இன்று வட கொரியாவின் வளர்ச்சியில் ஆகர்ஷிக்கப்பட்டிருக்கிருர்கள். தினே தினேஅமெரிக்க தென்கொரிய இராணுவப் பாதுகாப்பையும் கட்டுப்பாட்டையும் மீறிக் கொண்டு தென் கொரிய மக்கள் வட கொரியாவுக்குள் புகுந்து வருகின்றனர்.

இந்த மனமாற்றம் நீண்ட காலமாக தென் கொரிய மக்கள் மத்தியில் இருந்து வருகிறது. நான் 1957-ம் ஆண்டில் வட கொரியாவில் இருக்கும்போது உலகப் பிரசித்தமான 38வது அட்சரேகைக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இந்த அட்சரேகையின் இருமருங்கிலும் இரும்பு வேலி போடப்பட்டுள்ளது. இந்த வேலிதான் வட கொரியாவையும் தென் கொரியாவையும் இன்று துண்டாடி இருக்கிறது.

அட்சரேகையின் மத்தியில் 'பொது நிலம்' என்று அழைக்கப்படும் ஒரு பகுதி இருக்கிறது. இதில்தான் வட கொரிய, தென் கொரிய ரோந்து பாதுகாப்பு இராணுவங்களின் முகாமிருக்கிறது.

இம் முகாமிற்குள் காலெடுத்து வைத்ததும், நான் ஒரு புதுமையைக் கன்டேன். தென் கொரிய முகாமில் அமெரிக்கரைத் தவிர தென் கொரியர் ஒருவரையேனும் என்னுல் காணமுடியாதிருந்தது. இந்தக் காட்சி எனக்குப் புதுமையாகவும் இருந்தது.

நேரடியாகவே அமெரிக்க உத்தியோகஸ்தரிடம் சென்று ஒரு கேள்வியைப் போட்டேன். ''உங்கள் முகாமில் ஒரு தென் கொரியரையேனும் காணவில்லையே, ஏன்.''

என்னை இலங்கையிலிருந்து வந்துள்ள பத்திரிகையாளன் என அறிந்து கொண்டு சற்று தடுமாற்றத்துடன், ஆனுல் மரியாதையுடன் அவன் பதில் தந்தான், ''தென் கொரியர்களை நாங்கள் முகாமுக்குக் கொண்டு வருவதேயில்லை. அவர்கள் வட கொரியாவுக்கு ஓடிவிடுகிருர்கள்,'' என்று.

தென் கொரிய இராணுவ வீரர்கள் மத்தியிலேயே இந்த நிலை உருவாகியிருந்தால், பொது மக்கள் மத்தியில், வட கொரியாவுக்குஓடிவிடவேண்டுமென்ற எண்ணம் எவ்வளவு தூரம் புரையோடி இருக்க வேண்டும் என்பதை நீங்களே சிந்தித்துப்பாருங்கள்.

கொரிய மக்களை இன்று பீடித்துள்ள ஒரே பீடை அமெரிக்க ஏகாதிபத்தியம் தான் அது ஒழிந்தாலன்றி, கொரிய மக்களுக்கு குறிப்பாக தென்கொரிய மக்களுக்கு விமோசனமே கிடையாது.

தாய், தந்தை, தங்கைகள் தென் கொரியாவிலும், புதல்வர்கள் வட கொரியாவிலும், பெற்றெடுத்த சிசுக்கள் வட கொரியாவிலும்,பத்து மாதம் சுமந்து பெற்ற தாய் தென் கொரியாவிலும் இப்படியே எண்ணற்ற குடும்பங்கள் இன்று இருகூருகப் பிரிந்து சதாவும் கண்ணீரிலேயே தோய்ந்து செத்து வருகின்றன. ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் எங்கோ இருந்து வந்த அமெரிக்கர்கள் இரத்தத்தால், உடல் உறவால், உணர்ச்சியால் பிணைப்புண்ட இந்த மக்களை இன்று பிளவு படுத்தித் துண்டாடி உள்ளனர்—தொடர்ந்து அவர்களின் பாசக் கயிற்றை அறுத்தெறியமுண்டுகின்றனர்.

இந்த அக்கிரமத்தை உடனடியாக ஒழித்துக் கட்ட ஆசிய மக்கள் அனைவருமே முன்கை எடுக்கவேண்டும்.

### எச்.எம்.பி. முஹிதீன்

அமெரிக்கரின் வெளியேற்றமே கொரிய மக்களின் வாழ்வுக்கான ஒரே திசை மார்க்கம். ''அமெரிக்கனே,கொரியாவை விட்டு வெளியேறு!'' என்ற கோஷம் உலகெங்கணும் ஒலிக்கவேண்டும்,



38-வது அட்சரேகைக் கருகில் கொரிய படைத் தளகர்த்தருடன் தோழர் எச். எம். பி. முஹிதீன்

# கொரிய யுத்தத்தில் அமெரிக்க ராணுவத்தின் மிருகவெறி



அமெரிக்க யுத்த வெறிக் கும்பல் 1950, ஜூன் 25-ந் தேதி துவக்கிய ஆக்கிரமிப்பு யுத்தம் முடிவுற்று, இம்மாதம் 25-ந் தேதியுடன் 11 வருடங்கள் கழிந்துவிட்டன.

இவ்வாண்டும், உலகெங்குமுள்ள சமாதானம் விரும்பும், ஆயிரமாயிரமான மக்கள், ஜூன் 25-ந் தேதி முதல் ஜூலை 27ந் தேதி வரை, ''தென் கொரியாவிலிருந்து, அமெரிக்க இராணுவக் கூட்டம் உடனடியாக வெளியேற வேண்டும்'' என்று குரல் கிளப்பி, ஒரு மாத காலம் பூராவும் இயக்கம் நடத்துவர்.

அமெரிக்கக் குண்டு வீச்சால் அழிக்கப்பட்டுப் பியொங்யாங் நகரம் பிணக்காடாய்க் கிடக்கும் தோற்றம்.

இரண்டாவது உலகமகா யுத்தத்திற்குப் பின்னர், மிகப் பெரும் அளவில் நடைபெற்ற யுத்தம் கொரிய யுத்தமேயாகும்.

'சமாதானப் போர்வையில்' அமெரிக்க யுத்த வெறியர் நடத்திய ஆக்கிரமிப்புத் தன்மையையும், படுபாதகமான அவர்களின் யுத்தவெறிக் கொள்கையையும் கொரிய யுத்தம் தெள்ளத் தெளிவு படுத்தியது.

கொரிய யுத்தம் எப்படி ஆரம்பமாயிற்று?

1950-ம் ஆண்டு, ஜூன் மத்தியில்; அவ்வேளையில் அமெரிக்க பாதுகாப்புக் காரியதரிசியாகவிருந்த ஜான்சனுக்கும், அமெரிக்க கூட்டுத் தளகர்த்தர்கள் சபையின் தலைவராகவிருந்த பிரட்லிக்கும், அமெரிக்க இராணுவப் படையின் தூரகிழக்குப் பிரதேச பிரதம தளபதியாகவிருந்த மெக்கார்தருக்குமிடையே ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் ஒரு இரகசியக் கூட்டம் நடைபெற்றது.

உலகப் பிரசித்த யுத்தவெறியன் டல்லஸ் இவ் வேளையில் தென் கொரியாவுக்கு வந்தான். 38-வது அட்சரேகையைப் பார்வையிட்டான். இதன் பின், ஜூன் 18-ந்தேதி ''வட கொரியாவின் மீது படையெடுக்கும்'' திட்டத்தை அங்கீகரித்தான்.

டல்லஸ், தென் கொரிய பிற்போக்குப் பிண்டம், சிங்மன் ரீக்கு கீழ்வருமாறு கட்டளை பிறப்பித்தான்.

### அபியுக்தன்


''நேரம் வந்துவிட்டது. தென் கொரியாவை, வட கொரியா ஆக்கிரமிக்க முனைகிறது என்ற கூற்றில், இதை பிரச்சார ஆயுதமாகப் பாவித்து, உடனடியாக வட கொரியா மீது யுத்தத்தை துவக்கவும். இரண்டு வாரம் திற்கு நீடித்தால் எல்லாம் சரியாக, திட்டப்படி தொடர்ந்து நடக்கும். இவ்விரு வாரங்களில், ஐக்கிய நாட்டுச் சபையை அமெரிக்கா பலவந்தப் படுத்தி, தென் கெரியாவை வட கொரிய கம்யூனிஸ்டுகள் ஆக்கிரமிக்க முனைந்துள்ளதாகக் குற்றஞ் சாட்டி, ஒரு தீர்மானத்தை உருவாக்கும். இதைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் சபையின் நாமத்தில் அமெரிக்கா நேரடியாகவே தென் கொரியாவுக்கு வந்து விமான, இராணுவத் தளங்கள் அமைத்து, வட-கொரியாவுக்கு எதிரான யுத்தத்திற்குத் தலைமைதாங்கும்.''

தனது எஜமானனின் கட்டளையை ஏற்று, சிங் மன் ரீயின் கூலிப் பட்டாள தலைமைக் காரியாலயம் ஜூன் 21-ந் தேதி, இல. 29-வது கட்ட

—7-ம் பக்கம் பார்க்க

# அமெரிக்க எதிர்ப்பு பொங்கி எழுகிறது

## தென் கொரிய மக்களின் போராட்டம் தொடர்கிறது



கொரிய மக்கள் சேனையால் கைப்பற்றப்பட்ட அமெரிக்க ஆயுதங்கள்.

சமாதான பூர்வமாக கொரியாவை ஐக்கியப்படுத்தவும் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் பலாத்கார ராணுவத்தை தென்-கொரியாவிலிருந்து வெளியேற்றவும், மக்கள் கொரியாவின் தொழிலாளர் கட்சி பல தடவைகளில் மிகவும் நியாயமான திட்டங்களை முன்வைத்துள்ளது. இத் திட்டங்களில், ''கொரியாவின் ஒருமைப்பாட்டுப் பிரச்சினையை கொரியர்களே தீர்க்க வேண்டும்; அமெரிக்க வெறியர்களுக்கு இதில் என்ன வேலை'' என்று மக்கள் கொரிய தொழிலாளர் கட்சி திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளது.

முழு நாட்டின் ஐக்கியத்தை வலுப்படுத்தவும், பல்கிப் பரவச் செய்யவும், தென்-கொரியாவின்இன்றைய அவல நிலையைப் போக்குவது பற்றி போதிய நடவடிக்கை எடுக்க ஆலோசிக்கவும் ஒரு மாநாடு கூட்டும்படி இவ்வாண்டு மார்ச் மாதத்தில் மக்கள் கொரியாவின் மக்கள் சபை தென்-கொரியமக்களுக்கும், தென்-கொரியாவிலுள்ள முக்கியஸ்தர்களுக்கும் அபிப்பிராயம் தெரிவித்தது.

மீண்டுமொருமுறை கொரியாவின் வடக்கு, தென் பகுதிகளுக்கிடையே தபால் போக்குவரத்து, ரயில், ரோடு, விமானப் போக்குவரத்து; பொருளாதார, கலாச்சாரத் துறையில் பரஸ்பரம் தூது கோஷ்டிகள் பரிமாற்றிக் கொள்ளுதல் ஆகியவை பற்றியும் தனது அபிப்பிராயங்களை மக்கள் கொரியாவின் தலைமை மக்கள் சபை தனது திட்டத்தில் உள்ளடக்கி இருந்தது. இந்த நேச உறவு வளர வழி சமைக்கவும், நட்புறவு தழைக்க நிலை உருவாக்கவும் தென் கொரியவுக்கு தேவையான 300,000 டன் அரிசியையும், 100,000 டன் எஃகையும், 10 கோடி கிலோவாட்மின் சாரத்தையும் 19,000 டன் தும்பையும் மற்றும் தென்-கொரியாவுக்கு இன்று அவசர அவசியமாகத் தேவைப்படும் சிமேந்து, யந்திரக் கலப்பைகள் ஆகியவைகளையும் தந்துதவ மக்கள் கொரிய அரசாங்கம் முன்வந்தது.

இவைகளுடன், மற்றுமொரு அதிசயிக்கத்தக்க திட்டத்தையும் மக்கள் கொரியா முன் வைத்தது. அதாவது, தென்-கொரியாவில் வேலையில்லாமல் திண்டாடும் சகலரையும் சுவீகரித்து, அவர்களுக்கு வேலை, வாழ்வு வசதிகள் தர மக்கள் கொரிய அரசாங்கம் முன்வந்தது. இதன் மூலம், வீழ்ந்து பட்டு வரும் தென்-கொரிய பொருளாதாரத்திற்கு நல்வாழ்வழிக்க மக்கள் கொரியா விரும்பியது.

இந்தத் திட்டங்களை தென்-கொரிய மக்கள் சகலருமே வாழ்த்தி வரவேற்றனர்; போற்றிப் புகழ்ந்தனர்.

ஆனால், அமெரிக்க யுத்த வெறிக் கூட்டம் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. கொரிய மக்களின் விருப்பத்திற்கு எதிராக, கிளர்ந்தெழுந்த தென்-கொரிய மக்களின் வீரப் போராட்டங்களைத் துப்பாக்கி முனையில் அடக்கி ஒடுக்க முனைந்தது.

ஆனால், அமெரிக்க யுத்த வெறிக் கூட்டத்திற்கு எதிரான போராட்டம் தென்-கொரியாவில் தொடர்கிறது.

இம் மாதத்தில் கூட மிகப் பிரமாண்டமான மாணவர் ஆர்ப்பாட்டம் அமெரிக்க கையாளாகவிருந்த பிரதமரை அகற்றி ஓட்டக் கோரியுள்ளது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

தென்-கொரிய மக்களின் போராட்டம் வெற்றி பெறும் காலம் தூரத்திலில்லை.

# கொரியாவின் ஐக்கியமே ஒரே லட்சியம்

## தென் கொரியப் பத்திரிகைகளின் குரல்

தென்-கொரியாவில் தமது பலாத்கார ஆதிக்கத்தை ஸ்தாபித்து அமெரிக்க யுத்த வெறிக் கும்பல் கொரியாவை பிளவுபடுத்தி 19 ஆண்டுகள் கடந்துவிட்டன.

அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ், கொடுமை மிகு சர்வாதிகார ராணுவப் பிடிப்பின் கீழ் அல்லலுறும் தென்-கொரிய மக்கள், நாடு பிளவுபடுத்தப் பட்ட நாள் முதலே நாட்டைப் பிளவுபடச் செய்த அமெரிக்க யுத்த வெறிக் கூட்டத்திற்கும், அவர்களுக்குப் பாதந்தாங்கும் உள்நாட்டுப் பிற்போக்குக் கூட்டத்திற்கும் எதிராக சளையுறாத போராட்டம் நடத்தி வருகிறார்கள்.


கடுமையான தணிக்கை, வாய் பூட்டுச் சட்டங்களுக்கு மத்தியில் கீழ்வரும் பத்திரிகைகள் வெளியிட்டுள்ள செய்திகள், தென்-கொரியாவில் கொரியாவின் ஐக்கியத்திற்குப் பெருகி வரும் ஆதரவையும் மக்களின் லட்சியத்தையும் தெளிவுபடுத்துகின்றன.

தென்-கொரிய தினசரியான ஹொங்கொக் இல்போ 1964, ஜனவரி 9-ந் தேதி ''இன்று தென்-கொரியாவை எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினைகள் அனந்தம். வாரத்திற்குப் போதிய உணவு பெற, மாதச் சம்பளம் இல்லை. சம்பளம் பெற்றும் போதிய உணவு இல்லை. வீட்டுக் கூலிப் பிரச்சினை, அவசிய உணவுப் பொருட்களின் பிரச்சினை இன்னும் இது போன்ற பல பிரச்சினைகள். என்றாலும், எல்லாவற்றையும் விட நாட்டை எதிர்நோக்கும் அவசர அவசியமான, மிகவும் முக்கியத்துவம் மிக்க பிரச்சினை, நம் தாயகத்தின் ஐக்கியமாகும்'', என்று வலியுறுத்திக் கூறுகிறது.

மற்றுமொரு தென்-கொரிய தினசரியான சாலுப் கியுஞ்சேஷின்மூன் இவ்வாண்டு முதலாந் தேதி, ''இப் புத்தாண்டில் நம் நாட்டை ஐக்கியமுறச் செய்ய நாம் சங்கற்பமேற்றுப் பணிபுரிவோமாக. நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் நம் நாடு ஒன்றுபடுவது மிக மிக அவசியம். கிட்டத்தட்ட இருபது ஆண்டு காலமாக, தாய் வேறு, தந்தை வேறு, மக்கள் வேறு, மனைவி வேறு, கணவன் வேறு என்று நாம் பிரிந்து கூறுபோடப்பட்டவர்களாய் வாழ்கிறோம். கடிதப் போக்குவரத்து மட்டுமன்றி, எவ்வித தகவல்களையும் அறிய முடியாமல் நாம் தவிக்கிறோம். எத்தகைய துயரமான நிலை இது. இதில் நாம் உடனடியாக மாற்றம் உருவாக்க வேண்டும்'', என்று எழுதியுள்ளது.

தென்-கொரியப் பத்திரிகைகளின் அமெரிக்க யுத்த வெறிக் கூட்டத்தின் பலாத்காரப் பிரிவினைக்கு எதிரான இக் கருத்துக்கள், சகல தென்-கொரிய மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கின்றன.

கொரியாவை ஒருமைப்படுத்தும் பிரச்சினையில் தென் கொரிய மக்கள் சகலருமே, வட-கொரிய மக்களுடன் ஒருமித்து நிற்கிறார்கள். கொரியாவின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக இன்று இருப்பவர்கள், எங்கோ இருந்து வந்து கொரியாவை ஆக்கிரமித்துள்ள அமெரிக்க யுத்தவெறிக் கூட்டத்தினராகும்.



கொரியாவின் பாரம்பரிய நடனக் கலை. அமெரிக்க காலனி ஆட்சியின் கீழ் தென் கொரியாவில் அருகி அழிந்துவிட்ட அழகுக் கலைகள் வட கொரியாவில் மட்டும் செழித்து வளர்கின்றன.

# புதிய போராட்டப் பேரலை

## தென் கொரிய ஆட்சி தகர்கிறது

இவ்வருடம் கொரிய தினம் தென் கொரிய மக்களின் விடுதலைப் போராட்டம் மகத்தான புதிய உச்சத்தை அடைந்திருக்கும் சமயத்தில் வருகிறது.

கடந்த சில வாரங்களாக மாணவர் ஆர்ப்பாட்டங்களாக ஆரம்பித்து, சகல பகுதி மக்களையும் உள்ளடக்கிய பெரு வெள்ளமாகப் பரந்துவிட்ட போராட்டங்கள், அமெரிக்க அடிவருடியான ஜுங் ஹுய் பாக்கின் ஆட்சி வெளியேறக் கோருகின்றன. தினசரி பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையில் பெரும் மோதுதல்கள் நடைபெறுகின்றன. தினசரி பொலீஸ் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெறுகின்றன.

ஜப்பானிய ராணுவ வாதத்திற்குப் புத்துயிரூட்டவும் தென் கொரியாவில் ஜப்பானிய ஏகபோக (உண்மையில் அமெரிக்க மூலதனக் கட்டுப்பாட்டில் உள்ள) முதலாளிகளுக்குச் சலுகைகள் பெற்றுத்தரவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்துள்ள சூழ்ச்சியான ஜப்பான்-கொரியா பேச்சுவார்த்தைகளே கொந்தளிப்பிற்கு உடனடியான காரணம். இந்தத் துரோக நடவடிக்கையை அரசாங்கம் கைவிடுவதைக் கோருவதே மக்கள் எழுச்சியின் நோக்கம். இக் கோரிக்கைதான் விரிவுற்று இன்று பாக் அரசாங்கத்தின் ராஜினாமாவிற்கான கோரிக்கையையும் உள்ளடக்குகின்றது. கொரிய மண்ணில் ஜப்பானிய ஏகபோக இராணுவ வாதிகளின் சலுகைகள் திரும்ப நிறுவப்படுவதைக் கொரிய மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள்.

சிங்மன் ரீயின் கதி பாக்கையும் அணுகிவிட்டது. புதிய அடிவருடியைப் பதவியிலிட்டு நிலைமையைச் சமாளிக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் முயலலாம். ஆனால், எத்தனை ரீகளையும் பாக்குகளையும் மாற்றினாலும் அமெரிக்க ஆட்சி கொரியாவில் நிலைக்க முடியாது. மக்கள் போராட்டம் மீண்டும் வெடிப்பது உறுதி. கொரியாவில் அமெரிக்க காலனி ஆட்சியின் இறுதி அண்மிவிட்டது.

### இந்திய காங்கிரஸ்

# ஏகபோக முதலாளிகளின் கையில்

## கூறுபவர் நந்தா: டாங்கேயின் பதிலென்ன?

காங்கிரஸ் ஸ்தாபனங்களையும் பாராளுமன்ற அங்கத்தவர்களையும் ஏகபோக முதலாளிகள் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள் என்று, லக்னோவில் (உ.பி.) நடந்த காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பேசிய இந்திய உள்நாட்டு மந்திரி, குல்சாரிலால் நந்தா, ஓலமிட்டார். இக் கூட்டத்திற்கு மாஜி உத்தரப் பிரதேச மந்திரி கோவிந் சாஹய் தலைமைவகித்தார். ஒரு ஏகபோக முதலாளி தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் 45 பாராளுமன்ற அங்கத்தவர்கள் இருப்பதாக தன்னிடம் கூறியதாகவும், இது தனது குற்றச்சாட்டுக்கு ஆதாரம் என்றும் நந்தா கூறினார். அவர் மேலும், காங்கிரஸைச் சேர்ந்த தொழிலாளர்களும், கூட்டத்தில் இருந்தவர்களும், நாட்டில் காங்கிரஸ் ஸ்தாபனத் தேர்தல்கள் நடைபெற்ற பொழுது முதலாளிகளினால் தங்களின் கையாட்களைப் பதவிகளில் அமர்த்துவதற்காகச் செலவழிக்கப்பட்ட பெருவாரியான பணத்தையும் கவனத்திலெடுக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாதத் தலைமை இதே கட்சியிடமிருந்துதான் இந்தியாவில் சோஷலிஸத்தை ஸ்தாபிக்க எதிர்பார்க்கின்றது. டாங்கே கோஷ்டியினரின் சர்வதேசிய மாநாட்டுப் பிரதிநிதியும், வெகுஜன ஸ்தாபனங்களின் பேச்சாளரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னையநாள் மத்தியக் கமிட்டி உறுப்பினரும் ஆகிய திருமதி அருணா ஆசப் அலியை காங்கிரஸ் சோஷலிஸ ஸ்தாபிப்பை துரிதப்படுத்தும் நோக்கமாகக் காங்கிரசில் சேரச் செய்தமை திரிபுவாதிகளுக்கு காங்கிரஸின்மேல் உள்ள அசையாத நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றது.

இந்திய சோஷலிஸ ஜனநாகத்தின் மார்வாரி, குஜராத்தி பகுதிகளின் பெரும் முதலாளிகளின் பிரதிநிதியாகிய அசோக் மேத்தாவும் அவரின் ஆயிரத்திற்கு மேற்பட்ட பரிவாரங்களும் கூட காங்கிரஸின் மூலம் சோஷலிஸத்தை இந்தியாவில் ஸ்தாபிக்க அதில் சேர்ந்து கொண்டார்கள்.

தோழர் ஏ.கே. கோபாலன் கூறியதுபோல, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பூர்ஷ்வாக் கூலிகளான டாங்கே கோஷ்டியினர், அருணா ஆசப் அலியையும், அசோக் மேத்தாவையும் போல நேர்மையாகச் சென்று காங்கிரஸில் சேர்வார்களா, அல்லது உண்மையான மாக்ஸிஸ-லெனினிஸப் பாதையில் சோஷலிஸத்தை இந்தியாவில் ஸ்தாபிக்கப் போராடும் இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போட இந்தியப் பாட்டாளி வர்க்கத்தைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முனைவார்களா என்பதே இப்பொழுது கேள்வி.

# காரியம் ஆகும்வரை காலைப்பிடி, காரியமானால் கழுத்தைப் பிடி!

புதிய சமசமாஜ மந்திரிகள் பதவி ஏற்றதும், ஈழத்துத் தொழிலாளர்களில் சிலர் பூரித்துப்போயினர். சில இடங்களில் வெடிகள் சப்தம் கேட்டது இதற்கொரு எடுத்துக் காட்டாகும்.

இத் தொழிலாளர்கள், குறிப்பாக மத்தியதர வர்க்கத்தினர், தமது சாதாரண கோரிக்கைகள் உடனடியாகக் கிடைக்குமென்று களிபேருவகையுடன் துள்ளிக் குதித்தனர். அதிலும் 'டாக்டர் என். எம். பெரேரா நிதி மந்திரியான பிறகு நமக்கு என்ன குறை' என்று வாய்விட்டுக் கூறினர்.

தொழிலாளர்களின் காலைப் பிடித்து வளர்ந்த இத் தலைவர்கள், பதவி ஏற்றதும் தாம் இத்தனை ஆண்டு காலமாக அளித்து வந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்று தொழிலாளர்களும், மத்திய தர மக்களும் எதிர்பார்த்ததில் புதுமையில்லை.

தன் தலைமையிலேயே உருவான 21கோரிக்கைகள் பற்றி டாக்டர் என். எம். பெரேரா

இதைத் தொடர்ந்து, சரியாக 9 மணிக்கு வேலை துவக்க வேண்டும் என்ற கட்டளை.

இவைகள் எல்லாவற்றையும் விட, 21 கோரிக்கைகள் பிரச்சினையை 6 மாத காலத்திற்கு ஒத்திப் போடும்படி டாக்டர் பெரேரா கேட்டிருப்பது மிக மிகக் கோரமான தாகும்.

கடந்த 30 ஆண்டுகாலமாக இலங்கையிலுள்ள முதலாளி வர்க்கத்தினர் கூறி வந்ததை,

## ஒரு வார்த்தை

ஏதாவதொரு நல்ல வார்த்தை சொல்வாரென்று பலர் காத்திருந்தனர்.

ஆனால், எல்லாரினதும் நம்பிக்கையிலும் மண்விழும் ரீதியில், டாக்டர் என். எம். பெரேராவின் முதல் அறிக்கை இருந்தது. இத்தனை ஆண்டு காலமாக முதலாளிகள் கூறி வந்தது, டாக்டர் என். எம். பெரேராவே எதிர்த்தது, அவர் வாயிலிருந்து தெளித்தது. டாக்டர் பெரேராவும், அவரது 'தோழர்களான' இரு மந்திரிகளும் கூறினர்; ''தொழிலாளர்களும், மத்தியதர வர்க்கத்தினரும் தமது எட்டு மணி வேலையை சரியாக செய்ய வேண்டும்.''

குற்றம் சுமத்தி தொழிலாளர்களைத் தாக்கியதை, மந்திரிப் பதவி ஏற்ற இரண்டாம் நாளே சமசமாஜத் தலைவர் மறுபதிப்பு செய்ய முன்வந்தது வேதனை தரத்தக்க விஷயமாகும்.

25 வருட காலமாக, டாக்டர் என். எம். பெரேரா போட்டுவந்த போலி 'தொழிலாளர் தலைவர்' வேஷம், மந்திரிப்பதவியில் அவர் அமர்ந்த முதல் வாரத்திலேயே அம்பலத்திற்கு வந்துவிட்டது.

காரியம் ஆகும்வரை தொழிலாளர்களின் காலைப் பிடித்தவர்கள், இன்று அவர்களின் கழுத்தைப் பிடித்து நெரிக்க முனைந்துள்ளார்கள்.

# கொரிய யுத்தத்தில்...

5-ம் பக்கத் தொடர்

...ளையைப் பிறப்பித்தது. இதில், இராணுவ யூனிட்டுகள் 1, 2, 3, ஆகியவைகள் ஜூன் 25-ந் தேதி காலை 5 மணிக்கு வட-கொரியா மீது தாக்குதல் துவக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்துள்ளது.

26-ந் தேதியே, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தமது படைகளை வட கொரியாவுக்கு அனுப்பி வைத்தார்கள். இதைத் தொடர்ந்து, ஜூன் 27-ந் தேதி தமது அதிகாரத்தை உபயோகித்து கொரியாவில் ஐக்கிய நாடுகள் சபை தலையீடு நடத்த தீர்மானமொன்றை உருவாக்கி நிறைவேற்றியது.

இதன் மூலம், கொரியாவை தமக்கு வேண்டிய ரீதியில் யுத்த தளமாக்கத் திட்டமிட்டனர் அமெரிக்க யுத்தவெறியர்.

கொரிய யுத்தத்தின் மூன்றுண்டு காலத்தில் 8000 பெக்டரிகளையும், தொழிற் சாலைகளையும் அமெரிக்க யுத்த வெறிக் கும்பல் நாசப்படுத்தியது. இவைபோக 600,000 குடியிருப்பு வீடுகள், 5000 பள்ளிக்கூடங்கள், 1000 ஆஸ்பத்திரிகள், வைத்திய பரிசோதனை நிலையங்கள், 269தியேட்டர்களும், சினிமாக்கள், ஆயிரக்கணக்கான மக்கள் நலன் காக்கும் ஸ்தாபனங்களையும், கலாசாரக் கூடங்களையும் தூசுகளாக்கினர்—மண்ணோடு மண்ணாக்கினர்.

தென் கொரியாவிற்குப் பின்வாங்கிச் செல்லும் கட்டத்தில், கொரிய யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் சூ வோன் நகரில் 1,146 மக்களையும், தயிஜோன் நகரில் 8,000 மக்களையும் சொஞ்சூ நகரில் 4,000 மக்களையும் இன்னும் பல்வேறு பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான ஆயுதபாணியற்ற அப்பாவி மக்களை அநியாயமாகக் கொன்றனர்.

1961-ம் ஆண்டு, செப்டம்பர் 15-ந் தேதி வெளியான ஐ. நா. அறிக்கையொன்றின் படி, கொரிய யுத்தம் துவங்கி அவ்வேளை வரை அமெரிக்க ராணுவத்தால் 10 லட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்க ராணுவத்தின் மிருக வெறி குறித்து பிரெஞ்சுப் பத்திரிகையான 'சொய்ர்' எழுதுகையில், ''கொரியாவில் அமெரிக்கா செய்த அட்டூழியம், 20-ம் நூற்றுண்டில் நிகழ்ந்த மிகக் கொடிய நிகழ்ச்சியாகும்'' என்று குறிப்பிடுகிறது.

# வாலிபர்கள் புரட்சிப் படையாளிகளாக வேண்டும்

## வாலிபர் சம்மேளன பொதுச் செயலாளர் அறைகூவல்

கடந்த மே தினத்தின் போது கொச்சிக்கடை தெற்குப் பகுதியிலிருந்தே ஆரம்பமான கிளை ஊர்வலத்தில் கலந்து கொண்ட கொச்சிக்கடை வடக்கு, புதுக்கடை, கெஹல்வத்தை ஆகிய பகுதி வாலிபர் சங்கங்களின் முக்கிய தோழர்களுக்கும், ஹோட்டல் யூனியனைச் சேர்ந்த தோழர்களுக்கும், கட்சித் தோழர்களுக்கும் கொச்சிக்கடை தெற்கு வாலிபர் சங்கம் அண்மையில் விருந்துபசாரமொன்று நடத்தியது.

கொச்சிக்கடை தெற்கு கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் உப-தலைவரான தோழர் ஜே. எம். முஹிதீன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கலந்து கொண்ட தோழர் எச். எம். பி. முஹிதீன், பல நாடுகளில் வாலிபர்கள் ஆற்றி வரும் புரட்சிப் பணிகளை உதாரணங்களுடன் எடுத்து விளக்கி, ஈழத்து வாலிபர்களின் பொறுப்புமிக்க எதிர்கால இயக்க வேலைகள் பற்றிக் கூறினார்.

அடுத்து வாலிபர் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் டபிள்யூ. ஏ. தர்மதாஸ நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். தனது உரையில் அவர் கூறியதாவது:

''இன்றைய ஈழத்து அரசியல் சூழ்நிலையில், ஈழத்து வாலிபர்களின் கடமைகள் இரட்டிப்பாகியுள்ளன. நமது வேலைகள் இன்னும் மும்முரமாக வேண்டும். வாலிபர்களுக்கு மாக்ஸிஸ அறிவூட்டும் இயக்கத்தை நாம் இன்னும் அதிகமாக விஸ்தரிக்க வேண்டும். ஒவ்வொரு வாலிபனையும் எம்நாட்டு உண்மையான விடுதலைக்கு உயிர்தந்து போராடும் படையாளியாக, போர் வீரனாகநாம்ஆக்கவேண்டும்'', என்றார்.

★

## திரிபுவாதத் தலைவர் நீக்கப்பட்டார்

கடந்த 7-6-64-ல் நடைபெற்ற மாதகல் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கக் கூட்டத்தில், தலைவர் செ.ச. சுந்தரம் அவர்கள் திரிபுவாதப் பாதையில் போட்டி வாலிபர் சங்கம் அமைக்க முயன்றதால், சபையினால் ஏகமனதாக நீக்கப்பட்டார். புதிய தலைவராக தோழர் க. இராமச்சந்திரன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். மற்றும் உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். உபதலைவர்: மாதகல் செல்வா, காரியதரிசி: வே. கந்தசாமி உப-காரியதரிசி: வி. சிற்றம்பலம், தனாதிகாரி: க. செல்லத்துரை. நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. தொழிலாளி விற்பனையைக் கூட்டுவதென்றும், திரிபுவாதத்தினை எதிர்த்து, உண்மையான மாக்ஸிஸ—லெனினிஸ வழியைக் கடைப்பிடிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வருகிறது!

**கம்யூனிஸ்ட்**

மார்க்சிஸ-லெனினிஸ தத்துவ ஜூன் மாத இதழ்

ஆசிரியர்: **நா. சண்முகதாசன்**

கிடைக்குமிடம்: 123, யூனியன் பிளேஸ் கொழும்பு-2

**சாதாரண யுத்தம்**

என்னும்

**கொரியா படக்காட்சி**

ஜூலை 1-ந் திகதி மாலை 6-30 மணிக்கு

**கொச்சிக்கடை மோடி ஹாலில்**

காண்பிக்கப்படும்.

# பாட்டா தொழிலாளர்களின் வெற்றி

## தொழிலாளர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை கைவிடப்பட்டது

கடந்த இரு வாரங்களாக தகராறில் இருந்த இலங்கை பாட்டா சப்பாத்துக் கம்பெனித் தொழிலாளர்களின் பிரச்சினை, கடந்த 23-ந் தேதி நிர்வாகத்தின் பிரதிநிதிகளுக்கும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெற்ற மாநாட்டில் முடிவுற்றது. தொழிலாளர்களின் சார்பில் சி. டி. யூ. எப். பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டார்.

உத்திரவாத வார குறைந்த பட்ச சம்பளத்திற்கு பதிலாக, உத்திரவாத தின குறைந்த பட்ச சம்பளம் தரப்படவேண்டுமென்ற தொழிலாளர்களின் கோரிக்கையே தகராறுக்குக் காரணமாக அமைந்தது. மின்சார ஸ்தம்பிதத்தினாலோ, யந்திரக் கோளாறினாலோ, மூலப் பொருட்கள் இல்லாமையாலோ குறிப்பிட்ட தரத்தை ஒரு தொழிலாளி அடையத் தவறினால், அத்தொழிலாளிக்கு இன்றைய உத்திரவாத வார குறைந்தபட்ச சம்பளத்தில் ஆறில் ஒரு பகுதி தரப்படவேண்டுமென்ற கொள்கையை நிர்வாகம் அங்கீகரித்தது. திறமையின்மை காரணமாக விருந்தால், வருமானத்தில் நாள் சம்பள விகிதம் தரப்படும்.

29-ந் தேதிக்கு முன் வேலையிலிருந்து நீங்கப்பெற்றுள்ள சகல தொழிலாளர்களுக்கும் வேலை தருவதென நிர்வாகம் ஏற்றுக்கொண்டது. வேலையில்லாதிருந்த காலத்தில் இவர்களுக்குத் தரப்படவேண்டிய உபகாரச் சம்பளம் குறித்து முடிவெடுக்க, தொழிற் கோர்டுக்கு விடப்பட்டது.

நிர்வாகத்தினர் குற்றம் சாட்டிய தொழிலாளர்களின் கட்டுப்பாடற்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக தொழிற் சங்கம் வருத்தம் தெரிவித்த தன் பேரில், நிர்வாகத்தினர் காரணம் காட்டக் கோரி தொழிலாளர்கள் சிலர்மீது தான் எடுத்த நடவடிக்கையைக் கைவிடுவதாக ஏற்றுக் கொண்டது.

மற்றைய பிரச்சினைகள் பற்றி ஜூலை 10-ந் தேதி நடைபெறும்மாநாட்டில்பேசப்படும்.

# பீடிப் புகையிலை இறக்குமதியைக் கூட்டு

## பீடித் தொழிலாளர் கோரிக்கை

பீடித் தொழிலாளரின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்:

அரசாங்கத்துக்கு எங்கள் தொழிற் சங்க சம்மேளனம், பீடித் தொழிலாளரின் நிலை பற்றி பெட்டிசங்கள் மூலமாகவும், தூதுகோஷ்டிகள் மூலம் மந்திரிகளை பலமுறை பேட்டி கண்டு இது சம்பந்தமாய் விளக்கியும், இதுவரையிலும், எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

ஆனால் அரசாங்க பீடித் தொழில் நடத்தும் மந்திரிகளின் நன்மையைக் கருதியும் பெயரளவில் விளம்பரப் பலகை தொங்க விட்டுக் கொண்டு சுதந்திரக் கட்சிக்குக் காக்காய் பிடிக்கும் பீடி முதலாளிமார்களுக்கும் இறக்குமதி ''லைசென்ஸ்'' கொடுத்துள்ளனர்.

ஆனால் இவர்கள் இப்பொருட்களைப் பதுக்கிக் கள்ளச் சந்தையில் அதிக விலைக்கு விற்பதன் மூலம் இறக்குமதி ''லைசென்ஸ்'' இல்லாது உண்மையிலே நூற்றுக் கணக்கான தொழிலாளர்களை வைத்து தொழில் நடத்தும் முதலாளிகளையும், பீடித் தொழிலாளர்களையும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குட்படுத்திக் கஷ்டத்தை உண்டுபண்ணி இத் தொழிலை இந்நாட்டிலிருந்தே அழித்துவிட ஆரம்பித்துள்ளார்கள்.

ஆனால் இந் நிலையை அழித்துவிட ஆயிரக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் இன்று புரட்சிகரமான இயக்கத்தின் கீழ் அணிதிரண்டுள்ளார்கள் என்பதைக் கூறவிரும்புகிறேன். என்று கேகாலை வட்டார பீடித் தொழிலாளர்கள் கூட்டமொன்றில் ''ஐக்கிய இலங்கை பீடித் தொழிலாளர் சங்க கேகாலை டிஸ்திறிக்ட்'' சங்க காரியதரிசி தோழர் எஸ். ஏ. மஜீத் அவர்கள் கூறினர்.

அவர் மேலும் பேசும் பொழுது கூறியதாவது: 1964-ம் ஆண்டு இந்நாட்டிற்கு இலை, புகையிலை எவ்வளவு இறக்குமதி செய்யப்பட்டதோ அதே அளவுதான் இன்றும் இறக்குமதி செய்யப் படுகின்றது. ஆனால் பாவிப்பாளர்களும், உற்பத்தியாளர்களும் இன்று இரட்டிப்பாகியுள்ளனர். இன்றோ நாட்டில் தொழில்லாதோர் தொகை லட்சோப லட்சமாக மாறிக் கொண்டு போகும் இவ் வேளையில் அரசாங்கத்திற்கு எந்தத் தலை வலியையும் கொடுக்காத பீடித் தொழிலாளர்களையும் இறக்குமதியை இரட்டிப்பாக்காததன் காரணமாய் தொழிற் பஞ்சப் பேயிற்கு இரையாக்க முயற்சிக்கிறார்கள். இன்று அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பார்க்கும் பொழுது பீடித் தொழிலை வாழ விடுவதா அல்லது அழிப்பதா என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. பீடித் தொழிலாளரின் நல உரிமைகளைப் பாதுகாக்குமாறு அரசாங்கத்தைக் கேட்கிறோம். இத் தொழிலைச் சுதந்திரமாகச் செய்ய விடுவதாயின் இதை ஓர் கைத்தொழில் சட்டத்திற்குள் கொண்டு வரவேண்டும். பாவிப்பாளரின் சுகாதாரத்திற்கும், பாதுகாப்பு அழித்தால் தொழிலாளர் உரிமைகளைப் பெறக் கூடியதாய் இருக்கும் என்று கூறினர்.

பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:

1. இந் நாட்டின் உற்பத்திக்கு எவ்வளவு பொருள் தேவையோ அவ்வளவையும் இறக்குமதி செய்ய வேண்டும்.
2. ஒரு கம்பெனியில் எத்தனை தொழிலாளர்கள்ஷேமலாப நிதி இலாக்காவில் பதிவு செய்யப் பட்டிருக்கிறார்களோ அத்தனை தொழிலாளர்களுக்குமுரிய இலை,புகையிலையையே அக் கம்பனிக்குப் பெற்றுக்கொள்ள அனுமதித்தல் வேண்டும். ஷேமலாப நிதி இலாகாவிலிருந்து, தான் இத்தனை தொழிலாளர்களை வைத்துள்ளேன் என்பதை அத்தாட்சிப்படுத்தும் பத்திரத்தை வைத்துள்ள கம்பெனிகளுக்கு மாத்திரமே இறக்குமதி ''லைசென்ஸ்'' வழங்கப்படல் வேண்டும்.

# ஐக்கியத் தொழிலாளர் படை திரளட்டும்

## புத்தளத்தில் சண்முகதாசன் உரை

''மார்க்சிஸஅடிப்படையில், தத்துவ ரீதியில் உருவாகாத எந்த இடதுசாரி முன்னணியும் நீண்ட காலம் நின்று பிடிக்காது என்று நாங்கள் வலியுறுத்திக் கூறியபோது, சண்முகதாஸனும், பிரேமலால் குமாரசிறியும் ஐக்கிய இடதுசாரி முன்னணியை தகர்க்க முனைகிறார்கள் என்று எங்கள் மீது இடதுசாரி முன்னணித் தலைவர்கள் பழிசுமத்தினர். நாங்கள் கூறியது எவ்வளவு உண்மை என்பது இன்று நூற்றுக்கு நூறு தெளிவாகிவிட்டது-'' என்று, கடந்த 23-6-64-ல், புத்தளம் மைதானத்தில் நடைபெற்ற அகில இலங்கை கள்ளுத் தொழிலாளர் சங்க புத்தளம் கிளையின் ஆண்டு விழாவில் பேசிய போது தோழர் சண்முகதாசன் குறிப்பிட்டார்.

தோழர் ஏ. தீரசேகராவின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து பேசுகையில் தோழர் சண்முகதாசன் குறிப்பிட்டதாவது:

''இடதுசாரி முன்னணியை இன்று தகர்த்துள்ளவர்கள் யார்? நாங்களா, அல்லது இடதுசாரித் தலைவர்களா? சில மந்திரி பதவிகளுக்கு இடதுசாரி முன்னணியை முற்றுகவே சில தலைவர்கள் நிராகரித்து விட்டுச் சென்றுள்ளதை நாம் காண்கிறோம். இந்த கூட்டத்தில் தொழிலாளர்களின் ஐக்கியமும், ஸ்தாபன ரீதியான ஒற்றுமையும் அவசிய மிக்கது'' என்றார்.

தோழர் எச். எம். பி. முஹிதீன் பேசுகையில், மார்க்சிஸ-லெனினிஸ்டுகள் மீது பழி சுமத்துபவர்களுக்கு சாட்டை கொடுத்து, புத்தளம் பகுதி தொழிலாளர்களின் இன்றைய கஷ்டமான வாழ்வு பற்றியும் விளக்கினர்.

புத்தளம் கள்ளுத் தொழிலாளர் சங்கச் செயலாளர் தோழர் தாமோதரன் அறிக்கை சமர்ப்பித்தார்.

திரிபுவாதச் சாக்கடையிலிருந்து மீண்டும், மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகளின் அணியில் சேரும்படி எம். ஜி. மெண்டிஸைக் கோரும் தீர்மானமொன்று கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## கெனமன்

1-ம்பக்கத் தொடர்

மக்கள் ஐக்கிய முன்னணியின் அறிக்கை மேலும் குழறுபடியானது. இடதுசாரி ஐக்கிய முன்னணி உடைந்தது பற்றி ஒழிவு மறைவின்றி அவர்கள் சமசமாஜக் கட்சி மீது குற்றஞ் சாட்டியுள்ளனர். அதேபோல இடதுசாரி ஐக்கிய முன்னணி மாய்ந்து மடிந்து விட்டது என்பதை அவர்கள் ஒப்புக்கொள்கின்றனர், தம்மை அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு திரிபுவாதிகளைப்போல் பணிவுடன் அவர்கள் கேட்டுக் கொள்ளாத பொழுதும், அத்தகைய சந்தர்ப்பம் ஏற்படும் பொழுது அரசாங்கத்தில் நுழைவதற்கான வழிவகைகளுக்கு அவர்கள் இடம் வைத்துள்ளனர்.

சமசமாஜக் கட்சி அரசாங்கத்தில் சேர்வதன் மூலம் இழைத்த தவறு, தாம் அரசாங்கத்தில் சேரும் சந்தர்ப்பத்தைத் தடைசெய்தது என்பதே இவர்கள் அங்கலாய்ப்பு. சமசமாஜக் கட்சி இச் செயல் மூலம் முழு இடதுசாரி இயக்கத்துக்கும் செய்த கொலை பாதகக் குற்றத்தை இவர்கள் வேண்டுமென்றே மறக்கின்றனர். முழுத் தொழிலாளவர்க்கத்திற்கும், தொழிலாளவர்க்க ஐக்கியத்திற்கும், 21 கோரிக்கை இயக்கத்துக்கும் இதனால் ஏற்பட்ட மோசமான நஷ்டத்தை இவர்கள் மறைக்கிறார்கள். இவர்கள் இவற்றினை மறைக்க முயல்வதற்குக் காரணம் தமக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் சமசமாஜக் கட்சி செய்ததையே தாமும் செய்ய விரும்புவதாகும்.

தொழிலாள வர்க்கத்தைக் காட்டிக் கொடுப்பவர்களில் ஒரு பகுதியினர் அரசாங்கத்தில் சிறைப்பட்டுள்ளனர். மற்றப் பகுதி அரசாங்கத்துக்கு வெளியே வாயிலுக்கு அண்மையில் நடுவழியில் நிற்கின்றது. இதனால் எமது நாட்டு உழைக்கும் வர்க்க மக்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டாலும் அவர்கள் நடுவழியை விடப் போவதில்லை.

இப்பழைய திரிபுவாத சீர்திருத்தவாதத் தலைவர்கள் தமது காட்டிக்கொடுப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்த காலத்தில் அவற்றினை விளக்கி அதற்கு எதிராகப் போராடி, தொழிலாள வர்க்கத்தைப் பேரபாயத்திலிருந்து காப்பாற்ற புரட்சிவாதப் புதிய தலைமை சரியான செயல் முறைகளை முன்வைத்தது. இதனால் இன்று அது வளர்ந்து பலமுற்றுச் சரியான பாதையில் தொழிலாள வர்க்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக அவர்களுக்கு அண்மையில் இருக்கின்றது.

சொல்பவற்றைக் கேட்காமல் நடுவழியில் நிற்கும் தலைவர்கள் நடுவழியில் நிற்கின்றார்கள். திரும்பவும் பலமுள்ள பேரணியாகத் திரண்டு தவறற்ற பாதையில் நாம் முன் செல்வோம்.

1-ம் பக்கத் தொடர்

பத்திரிகை விற்பனையை அதிகரிக்கும் அதே வேளையில் நன்கொடையாளர்களின் பட்டியலை அதிகரிக்கவும் தோழர்கள் முயல வேண்டும்.

புரட்சிகரப் பத்திரிகைகளுக்கு நன்கொடை இயக்கம் மிகமிக அவசியமானதாகும். எனவே, ஒவ்வொரு மாதமும் ரூ. 1/- ம், அதற்கு மேலும் பத்திரிகை வளர்ச்சி நிதி சேகரிக்க சகல தோழர்களையும் வேண்டிக்கொள்கிறோம். இதற்காக, நிதி வசூலிப்புப் பணங்கள் பெறுவதற்கு சில முக்கியமான தோழர்களை நியமித்துள்ளோம். எல்லா நன்கொடைகளுக்கும் ரசீது தரப்பட வேண்டும்.

இந்த அதிமுக்கிய, இன்றைய எமது வளர்ச்சிக் கட்டத்தில் இன்றியமையாத இவ்வியக்கத்தில் பரிபூரணமாக ஈடுபட்டு, நிதி தருவோர் தொகையை அதிகரிப்பது மூலம் உங்கள் கடமையை சரிவரச் செய்வீர்களென எதிர்பார்க்கிறோம். இந்த மிக முக்கிய கடமையை பூரணத்துவப்படுத்தி வெற்றிமிக்கதாக்க சகல தோழர்களையும் அறைகூவி அழைக்கிறோம்.

இலங்கை மார்க்சிஸ

## போதனைக் குழு

அரசியல்,பொருளாதாரம் பற்றிய சொற்பொழிவுகள்

| பொருள்: | தேதி நேரம் |
| --- | --- |
| 1. உபரி மதிப்புத் தத்துவம் | 30-6-64 |
| 2. பொருளாதார நெருக்கடிகளுக்கான காரணம் | 9-7-64 |
| 3. ஏகாதிபத்திய ஏகபோகத்தின் வளர்ச்சி | 21-7-64 |
| 4. சோஷலிஸப் பொருளாதாரம் | 30-7-64 |

வகுப்புகள் ஆரம்பம் 5 மணி

இவ்வகுப்புகள் டரட் ரோட்டிலுள்ள செஞ்சிலுவை மண்டபத்தில் நடைபெறும். தற்போது ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே வகுப்புகள் நடைபெறும்.

சொற்பொழிவாளர்:

**சண்முகதாசன்**

குறிப்பு: இவ்வகுப்புக்கள் மார்க்சிஸ போதனைக் குழு அங்கத்தவர்களுக்கு மட்டுமே. இக் குழுவில் சேர விரும்புவோர் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

ஈ. டி. மூர்த்தி,
பிரான்சிஸ் பெரேரா,
கூட்டுக் காரியதரிசிகள்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஹசன் மொஹிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: 'தொழிலாளி' அச்சகம்9, டிமெல் வீதி, கொழும்பு-2